

ஜீவானந்தம் வாழ்க்கை வரலாறு

எழுதியவர் :

இஸ்மத் பாஷா

தேர்தல் வெளியீடு

தோழர் ஜீவானந்தம்

வாழ்க்கை வரலாறு

எம். இஸ்மத் பாஷா
எழுதியது.

ஏ. எஸ். கே. அய்யங்கார்
முன்னுரை.

வெளியிடுவோர்:
இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி
தமிழ் மாகாணக் கமிட்டி
1-6, டேவிட்ஸன் தெரு,
ஜி. டி., சென்னை

மார்ச் 1946] [விலை அணா 3

முகவுரை

கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக நான் ஜீவானந்தத்தை அறிவேன். அன்று முதல் அவருடன் நெருங்கிப் பழகிவருகிறேன். தமிழ் நாட்டில் தலைசிறந்த போல்ஷ்விக்காக அவர் அன்று முதல் இன்று வரை திகழ்ந்து வருகிறார். தமிழ் நாடு பெற்றெடுத்த சிறந்த புதல்வர்களில் ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றைப்பற்றி எழுதி, அதற்கு முகவுரையை நான் தர வேண்டும் என்று தோழர் இஸ்மத் என்னைக் கேட்டபோது, அதற்கு லாயக்குள்ளவன்தானா நான் என்று எனக்குத் தோன்றிற்று. நாடெங்கும் பிரசித்தி பெற்ற ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றிற்கு, யாருக்கும் தெரியாத என்போன்ற ஒருவனுடைய முகவுரை அவசியமில்லை என்று நினைத்தேன். ஆனால் நான் கண்டிப்பாய் முகவுரை எழுதவேண்டும் என்று ஜீவாவே கூறினார். என் நண்பரின் கட்டளைக்குப்பணிகிறேன்.

தேர்தல் வந்து விட்டது. துரதிர்ஷ்டவசமாகத் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சியாகிய கம்யூனிஸ்டு கட்சியைத் தேர்தல் முனையிலும் எதிர்ப்பது என்று காங்கிரஸ் மகாசபை முடிவுசெய்து விட்டது. மாகாண சட்டசபைத் தேர்தலில் சென்னைத் துறைமுக பாக்டரி லேபர் தொகுதிக்குத்தான் அபேட்சகராகக் கம்யூனிஸ்டு கட்சி ஜீவாவை நிறுத்திவைத்திருக்கிறது.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் சகல துறைகளிலும் சிறந்தவர்களையே தேர்தலுக்கு நிறுத்துகிறோம். ஜனங்களின் நம்பிக்கைக்குப்பாத்திரமானவர்களாகவும், ஜனங்களின் ஓட்டுகளைக்கேட்பதற்கு உரிமையுள்ளவர்களாகவும் இருக்கின்றவர்களையே அபேட்சகர்களாகப் பொறுக்குகிறோம். தன்னை ஒரு அபேட்சகராகப்போடும்படி எங்கள் கட்சியிலுள்ளவர்களில் யாரும் மனுப்போடுவதில்லை. ஜீவானந்தம் பொது ஜனங்களுடைய அபேட்சகர். ஒவ்வொரு தொழிலாளியும் அவருக்கு ஓட்டுப்போடுவதோடு நிற்கக்கூடாது, அவர் தாங்கிப்பிடிக்கும் நம்முடைய

கொடியாகிய செங்கொடிக்கும், தேர்தலுக்கும் ஒவ்வொரு தொழிலாளியும் பணமும் கொடுக்கவேண்டும்.

இந்தத்தேர்தலில் வெற்றிகரமாக ஜீவா தேர்ந்தெடுக்கப் படுவாரேயானால், சட்டசபையில் தொழிலாளர்களுக்காக அவர் என்ன செய்வார் என்பது நகரத்தொழிலாளர்கள் எல்லோருக்கும் ஏன், தமிழ் நாட்டுத்தொழிலாளர்கள் எல்லோருக்கும் நன்கு தெரியும். தொழிலாளிகளின் நலன்களைப் பாதுகாத்து நிற்ப தோடு, கடந்த பல வருடங்களாக நாம் போராடிவருகிற உரிமைகள் நமக்கு வழங்கப்படுவதற்காகவும் விடாமல் போராடுவார். தோழர் ஜீவா சகல துறைகளிலும் தேர்ச்சியடைந்த ஒரு போல்ஷ்விக். தொழிலாளிமக்களின் உரிமைகளை வற்புறுத்தி அவர் தன்னுடைய பிரசங்கத்திறமையைக் காட்டுவாரே யானால், சட்டசபை சுவர்களும் கிடுகிடுத்து ஆடும். அவர் அங்கு அவ்விதம் கர்ஜிக்கும் போது, செங்கொடியை உயர்த்திப்பிடித்துத் தொழிலாளி வர்க்கம் முழுவதும் ஒன்று திரளுமேயானால், ஒரு புதிய உலகத்தை———எல்லோருக்கும் வேலை, உணவு, அடிப்படைச் சம்பளம், வயோதிகப் பென்ஷன், பிரஸவசகாய நிதி, 42 மணி வேலை நேரம் முதலிய வற்றை அளிக்கக்கூடிய ஒரு புதிய உலகத்தை————நிர்மாணிப்பதில் அவர் முழுக்க முழுக்க உதவி செய்வார்.

ஜீவாவின் வாழ்க்கையைப் பற்றி தோழர் இஸ்மத் எழுதியிருக்கும் இக்குறிப்புகள், நம்தேச சுதந்திரத்திற்கு முன்னணியில் நின்று போர் புரிகின்ற வீரர்களில் ஒருவரின்—— ——மனதைப் பறிக்கும் நிகழ்ச்சிகள் பலமலிந்த—— ——வாழ்க்கையாகும். அநேக வருடங்களை ஜீவா சிறையில் கழித்திருக்கிறார். நம் ஜனங்களின் மகத்தான ஸ்தாபனமாகிய காங்கிரஸில் உயர்ந்த ஸ்தானமாகிய அ. இ. கா. கமிட்டியில் அங்கத்தினராக இருந்திருக்கிறார். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியிலும், அதன் காரியக் கமிட்டியிலும் அங்கம் வகித்திருக்கிறார். இடது சாரி பத்திரிகைகள் பல வற்றிற்கு ஆசிரியராக இருந்திருக்கிறார். மறுமலர்ச்சி

இயக்கத்தின் கவியாக, புதிய தமிழ் நாட்டின் கவியாக, புரட்சியின் கவியாக அவர் திகழ்கிறார்.

இச்சிறு புத்தகத்தைப் படிக்கிறவர்கள், எவ்விதம் சேவை செய்வதற்காக ஜீவா கஷ்டப்பட்டார் என்பதையும், நம்தேசத்தின் சுதந்திரத்திற்காக சிறந்த முறையில் சேவை செய்யவேண்டும் என்பதற்காக எவ்விதம் போராடினார் என்பதையும் அறிவார்கள். இதேகருத்தை செம்மையாகக்கடைப்பிடிக்க எவ்விதம் அவர் கம்யூனிஸ்டு கட்சியில் சேர்ந்தார் என்பதையும் அறிவார்கள். இவ்விதம் தான் தேசப்புதல்வர்களில் தலை சிறந்தவர்கள் கம்யூனிஸ்டுக்கட்சியில் வந்து சேருகிறார்கள்.

பத்து வருடங்களுக்கு முன்பு ஜீவா கம்யூனிஸ்டு கட்சியில் அங்கத்தினரானார். அப்போது கட்சி சட்ட விரோதமாக இருந்தது. அதாவது, கட்சியின் பெயரைச் சொன்னாலே போலீஸின் கொடிய அடக்கு முறைக்கு ஆளாக வேண்டியிருந்த அந்தக்காலத்தில் அவர் கட்சியில் சேர்ந்தார்.

தங்களுடைய அன்புக்குப் பாத்திரமான ஒருவரின் வாழ்க்கையைப்பற்றிய இக்குறிப்புகளை தமிழ்மக்கள் —— குறிப்பாகத் தொழிலாளர்கள் ————மனம் விரும்பிமகிழ்ச்சியுடன் வாசிப்பார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

இக்குறிப்புகளை எழுதிய தோழர் இஸ்மத்தைப்பற்றி சில வார்த்தைகள். இவர் ஒரு இளம் புரட்சிக்காரர். எங்கள் கட்சியின் "ஜன சக்தி" பத்திரிகையின் ஆசிரியர்கள் போர்டில் ஒருவர். லெனின் வழியில் ——— அதாவது தொழிலாளிகளின், விவசாயிகளின் எளிய பாஷையில் ——— எழுதக்கூடியவர். ஜன சக்தி' வாசகர்கள் இவரை நன்கு அறிவார்கள். இச்சிறு வாழ்க்கை வரலாற்றைத் தோழர் இஸ்மத் பேனாவினால் எழுதவில்லை; சித்திரங்களாகச் சித்தரித்திருக்கிறார். இச்சிறு வெளியீட்டில மகிழ்ச்சியையும், நன்மையையும் தமிழ்மக்கள் அடைவார்கள் என்று நம்புகிறேன்.

சென்னை,
4—3—'46, }

ஏ. எஸ். கே. அய்யங்கார்.

I

முன்னேற்ற இயக்கம்

காலம் மாறுகிறது. அதோடு மனிதன் மாறுகிறன். அவனேடு மனேபாவமும் மாறுகிறது! பழயன மறைகின்றன; புதியன தோன்றுகின்றன. இருளைவிட்டு ஒளியை நோக்கி உலகம் முன்னேறி வருகிறது.

தமிழ் நாடும் முன்னேறி வருகிறது! ஐம்பது வருடங்களுக்கு முன்பிருந்ததல்ல இன்றைய தமிழ் நாடு. வெள்ளைப் பரங்கியை துரை என்ற காலம் போச்சு. "வெள்ளை ஏகாதிபத்யத்தை வெளியேற்றும்" காலமாச்சு. "எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு. நாம் எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு" வேறெருருவனுக்கு உழைத்துக் கொட்டுவது விதிப்பயன் என்று நினைத்தகாலம் மலையேறி விட்டது. உழைப்பவனுக்கே உலகம் என்று கர்ஜிக்கும் காலம் உதித்துவிட்டது.

இந்தக் காலம் ஒருநாளில் திடீரென்று வந்து விடவில்லை. பலவருடங்களாகக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வந்திருக்கிறது. இன்னும் வளர்ந்து வருகிறது. இன்று கோஷமாக இருப்பதை வாழ்க்கை அனுஷ்டானமாக்கும் வழியில் வெகு வேகமாக நடந்துகொண்டிருக்கிறது.

பாதையிலே எவ்வளவோ தடங்கல்கள்- முன்னேற விடாமல் மக்களைத் தடுத்து எதிர்த்து நிற்கும்

சக்திகள் எத்தனையோ! வழி காட்டியவர்களுக்கே சில சமயம் வழி தவறிவிடும்; நடுக்கம் கண்டுவிடும்; இன்னும் மேலே போவதற்கு பயந்து சிலர் நின்று விடுவார்கள். மற்றும் சிலர் முன்னேற விரும்புகிறவர்களைப் பின்னுக்கு இழுக்கவும் முற்படுவார்கள். அப்படி இழுக்கும்போது, அறிந்தோ அறியாமலோ, முன்னேற்றத்தை எதிர்க்கும் சக்திகளுடன் ஐக்கியமாகி விடுவார்கள்.

ஆனால் ஜனங்கள் நிற்கமாட்டார்கள். எத்தனை ஆயிரக்கணக்கான வருடங்களாக அவர்கள் முன்னேறி நடந்து வருகிறார்கள்! என்றுமே அவர்களை யாராலும் பரிபூரணமாகத் தடுத்து நிறுத்த முடியவில்லை! இனியும் யாராலும் தடுத்து நிறுத்த முடியாது!

தமிழ் மக்களும் பிற்போக்கு சக்திகளை எதிர்த்துப் போராடினார்கள். "வந்தே மாதரம்" என்று சொன்னால் ஒரு காலத்தில் ஏகாதிபத்யம் தடி கொண்டு தாக்கிற்று. "புலையருக்கும் பறையருக்கும் விடுதலை" என்று கோஷித்தபோது சனாதனிகள் எதிர்த்துக் கிளம்பினார்கள். "உழைப்பவனுக்கே உலகம்" என்று பேசும்போது, சுரண்டும் கூட்டமே எதிர்த்துக் கிளம்புகிறது.

அன்று "வந்தே மாதரம்" என்று சொல்லிய போது மக்களின் உள்ளத்தில் உணர்ச்சி பிறந்தது. இன்று அது மட்டும் உணர்ச்சி ஊட்டவில்லை. "உழைப்பவனுக்கே உலகம்" என்று கூறினால்தான் கோடிக்கணக்கான பாட்டாளிமக்களின் உள்ளத்திலே மின்சாரசக்தி பாய்கிறது. இந்த கோஷத்தை வைத்துக்கொண்டு பழய

ஸ்லோகத்தைப் பார்த்தால், அது பிற்போக்கான தாகவே தோன்றும். ஆனால் அன்று அது பிற் போக்கானது அல்ல. அன்று அந்த கோஷத்தை கோஷித்ததற்காக ஏகாதிபத்தியம் தடிகொண்டு தாக்கியபோது, தலைகுனிந்து அடிபணிந்து போகாமல் தமிழ்மக்கள் எதிர்த்துப் போராடியத னாலேயே, இன்று "உழைப்பவனுக்கே உலகம்" என்ற உணர்வைப் பெற முடிந்தது. அந்த கோஷத்திற்கும் இந்த கோஷத்திற்கு மிடையே பல வருடங்கள் உருண்டோடி விட்டன.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உணர்ச்சிபெற்ற தமிழ் மக்கள், மூடப் பழக்கவழக் கங்களுக்கு எதிராகவும், ஜாதிமதக் கொடுமை களுக்கு எதிராகவும் எழுந்தார்கள். மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க முற்பட்டவர்கள், "அது மட் டும் போதாது, சுரண்டலையும் ஒழிக்கவேண்டும்" என்று உணர்கிறார்கள். அப்போதுதான் அவர் கள் மனக்கண்முன் நிற்கும் சுதந்திர சுபீட்ச உல கத்தைக் காணமுடியும்.

இவ்விதம் அடியடியாய் எடுத்து வைத்து, படிப் படியாய் தமிழ்நாடு முன்னேறிவந்திருக்கிறது. இந்த முன்னேற்றத்திற்கு வழிகாட்டிய தலைவர்கள் பலருண்டு. ஒவ்வொருபடி முன்னேற்றத்திற்கும் ஒவ்வொரு விதமானவர்கள் தலைவர்களாக இருந் திருக்கிறார்கள். அந்தப் படியைக் கடந்து விட்டால் பிறகு, அடுத்தபடியிலும் ஜனங்களுக்கு வழிகாட்டி முன்னேறிய தலைவர்கள் வெகு சிலரே!

அந்த வெகு சிலரில் ஒருவர்தான் தோழர் ஜீவானந்தம். இவருடைய வாழ்க்கையே முன்

னேற்ற சக்தியின் சரித்திரத்தோடு இணைந்து பிணைந்திருக்கிறது. மேலும் மேலும் முன்னேறி, தமிழர்களின் சுதந்திர சுபீட்ச குடியரசைக்காண ஆசைப்படும் ஒவ்வொரு தமிழனும் இவருடைய சரித்திரத்தைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுவதில் ஆச்சரியமில்லை.

II

முளைப்பயிர்

தமிழ்நாட்டின் தென்கோடியில் இயற்கை அன்னையின் திருவருள் பிரகாசத்தோடு அமைந்து கிடக்கிறது நாஞ்சில் நாடு. தமிழ்நாட்டை விட்டுப் பிரிக்கப்பட்டு திருவாங்கூர் சமஸ்தானத்திற்குள் அடங்கிக் கிடக்கிறது. மலைவளமுதல் கடல்வளம் வரை நிலவளம் நீர்வளம் மலியப்பெற்று, பார்ப்போர் கண்களைக் கவருகிறது. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளைபோன்ற தமிழ் அறிஞர்கள் பலரைப் பெற்றெடுத்த பெருமையைக் கொண்டாடுகிறது.

அந்த நாட்டில் பாண்டியகுல மன்னர்களால் கௌரவிக்கப்பட்ட பூதப்பாண்டி எனும் ஊர், தோழர் ஜீவானந்தத்தைத் தமிழ் மக்களுக்குச் சேவைசெய்ய காணிக்கையாக அளித்திருக்கிறது.

அவருடைய தந்தை பட்டன்பிள்ளை ஒரு ஏழை விவசாயி. வேதாந்த மனப்பான்மை படைத்த ஆஸ்திகர். எல்லோருக்கும் இனியவர். பரோபகாரி. ஆகவே, அவர் ஜனங்களின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றதில் வியப்பில்லை. அவரு-

டைய அன்னை ரொம்பசாது. பெயர் உமையம்மை. பொறுமையும் நிரம்பப் பெற்றவர்.

பெற்றோர்களின் உயர்ந்த குணங்களெல்லாம் ஜீவாவிடம் இருந்தன. பள்ளிக்கூடத்திலும் சரி, விளையாடுமிடங்களிலும் சரி, மற்றவர்கள் பின்பற்றக்கூடிய திறமையையும் புத்திசாதுர்யத்தையும் காட்டினர். எதிர்காலத்தில் தலைவனாகத் திகழக் கூடிய அடையாளங்கள் அப்போதே அவரிடம் தென்பட்டன.

பள்ளிவகுப்பில், அவருக்குத்தான் முதல் ஸ்தானம். ஆங்கில நடுத்தரப் பாடசாலையில் படித்த காலையில், பள்ளிக்கூடத்திலேயே தலைசிறந்த மாணவர் அவர்தான். விளையாட்டிடங்களில் தன் சகாக்களிடையில் அவரே முதல்வரும் தலைவரும். பெற்றோர்களின் தெய்வபக்தி ஜீவாவின் வாழ்விலும் நிறையக் குடிகொண்டிருந்தது. பள்ளியில் ஆசிரியர்கள் எல்லோருக்கும் மிகப் பிரியமான மாணவர். அவருடைய மதிநுட்பத்தையும் கெட்டிக்காரத் தனத்தையும் ஒவ்வொரு ஆசிரியரும் வாயாரப் பாராட்டியிருக்கிறார்கள். பரோபகாரம் அவருக்கு இயற்கையாக அமைந்த குணம். அந்தக் காலத்தில அதிகாலையில் நீராடி ஆலயந்தொழுவது வெகு பிரியம் ஜீவாவுக்கு. தெய்வபக்தியோடு சமூகத்திற்குப் பணிவிடை செய்வது தன் கடமை என்று எண்ணியது சிறுவனின் உள்ளம். சொந்த ஊரிலிருந்த ''திருப்பணிச் சங்கத்தின்'' நடவடிக்கைகளில் உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொண்டார்.

நாலாவது பாரத்தில் படித்துக்கொண்டிருந்தார். அப்போது தேசத்தில் புதியதோர் சக்தி தோன்றிற்று. மகாத்மாகாந்தியின் ஒத்துழையாமை இயக்கப் பிரசாரம் நாட்டைத் தட்டி எழுப்பிற்று. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தது. இந்தியாவின் உள்ளம் (தென்னுப்ரிக்காவில் இந்தியமக்கள் பட்ட கஷ்டத்தைப் பார்த்து ஒவ்வொரு இந்தியனுக்கும் ஆத்திரம் பொங்கிற்று.) மத்திய கிழக்கு நாடுகளில் முஸ்லிம் மக்களுக்கு ஏகாதிபத்யம் இழைத்த தீங்குகளைக் கண்டு, கிலாபத்து விஷயத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் நடத்தையைக் கண்டு ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கோபம் அத்துமீறி வந்தது. வாக்குறுதிகளைக் காற்று வாக்கில் பறக்க விட்டு அடக்குமுறை தர்பாரை நடத்திய அதிகாரவர்க்கத்தை எதிர்த்து ஒவ்வொருவருக்கும் ஆவேசம் ஏற்பட்டது.

சிறுவன் ஜீவானந்தம் இதற்கு விதிவிலக்கல்ல. காந்திஜி சொன்னது ஒவ்வொன்றும் அங்கும் எட்டிற்று. இந்தியமக்கள் யாவரையும் ஒன்றுதிரட்ட காந்திஜி முயற்சி எடுத்துக்கொண்டார். ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் ஐக்கியப்படுத்துவதற்காக, சுயராஜ்ஜியத்தையும், கிலாபத்தையும் ஒன்ருக இணைத்தார். தீண்டப்படாதவர் என்று ஒதுக்கப்பட்டுக் கிடந்த மக்களையும் மற்றவர்களுடன் சமநிலைக்குக் கொண்டு வருவதற்காக, தீண்டாமை ஒழிப்பை தன் நிர்மாணத் திட்டத்தில் சேர்த்தார். ஜனங்களின் சொந்த பலத்தில் நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக, சுயசேவையைப் பூர்த்திசெய்து கொள்ளும் கதர் திட்டத்தை வெளியிட்டார்.

இவைகளெல்லாம் இளைஞன் ஜீவாவின் உள்ளத்தில் மின்சார சக்திபோல் பாய்ந்தன. பசுமரத்தாணிபோல் பதிந்தன. பள்ளிக்கூடத்திலும், ஊர் ஜனங்களிடமும் இதைப்பற்றிப் பேச முற்பட்டார். தன் சொந்த ஊரில் ஒவ்வொரு சனிக்கிழமையும் காந்தி பஜனை நடத்தி காங்கிரஸ் பிரசாரம் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டார்.

அந்த வயதிலேயே சுயமாகக் கவிதைகட்டும் திறமை வந்துவிட்டது ஜீவாவுக்கு. அவர் எழுதிய முதல்பாட்டு காந்திஜியையும் கைராட்டினத்தையும் பற்றியது. இரண்டாவது பாட்டின் பல்லவி பின்வருமாறு:—

திடமுடனிடர் கெடவுட
னுடையணிந்திடவே — திருவுடை
கதரணிந்திடவே

காந்திஜி, கதர், கைராட்டு பற்றி பல பாட்டுக்கள் அக்காலத்தில் அவரால் பாடப்பட்டன. பக்திப்பாடல்களும் இயற்கைக் காட்சிகளைப் பற்றிய பலபல பாடல்களும் கூட அக்காலத்தில் அவர் இயற்றினார்.

காட்சிகண் காட்சியே
காந்தத் தாடகை மலை (காட்சி) என்று

தன் ஊர் பக்கத்திலிருக்கும் தாடகை மலையைப் பற்றி அவர் அன்று பாடிய பாட்டை இன்றும் அவருடைய நண்பர்கள் ஆர்வத்துடன் பாடிக் காட்டுகிறார்கள்.

ஐந்தாவது பாரத்தில் படிக்கும்போது எண்பது வெண்பாக்களை அவர் இயற்றினார். கதர் வெண்பா நாற்பது; இராட்டின வெண்பா நாற்பது!

இவற்றைப் படித்துப் பார்த்து அவருடைய தமிழாசிரியருக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை! ஆச்சரியக் குறியே கண்களில் தோன்றின! "ஒரே ஒரு வெண்பாவில் மட்டும் ஒரு தளை தட்டுகிறது. மற்றவை எல்லாம் சரியாக இருக்கின்றன. கருத்துகள் அபூர்வமாக அமைந்திருக்கின்றன!" என்று சொல்லி தட்டிக்கொடுத்தார். இந்த வார்த்தைகள் இளைஞனின் உள்ளத்தில் மிகுந்த உற்சாகத்தை உண்டுபண்ணின.

இந்தக் காலத்தில்தான் ஜீவா பொது அறிவை வளர்க்க ஏராளமாக நூற்கள் படிக்கவேண்டுமென்ற தீர்மானத்திற்கு வந்தார். தமிழ் இலக்கியங்களாக பாரதி நூற்கள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள் ஆகியவைகளையும், தேசீய அரசியல் நூற்களாக காந்திஜி, திலகர், தாதாபாய் விபினசந்திர பாலர், சுரேந்திரநாத் பானர்ஜி, லிங்கன், மாஜினி, மாக்ஸ்வினி, டி. எல். வாஸ்வானி ஆகியவர்கள் எழுத்து பேச்சுத் தொகுதிகளையும், வேதாந்த தத்துவஞானரீதியாக விவேகானந்தர், இராமகிருஷ்ணர், ராமதீர்த்தர், தாயுமானவர், கைவல்யம், தாகூர் முதலியவர்களின் நூற்களையும் படித்தார். இரண்டு மூன்று ஆண்டுகள் மேற்படி நூல்களை ஏராளமாகப் படித்தார்.

ஹைஸ்கூல் இருந்த நாகர்கோவிலில் ஜீவா அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். அவர் பள்ளி இறுதி வகுப்பில் படிக்கும் காலத்தில் வட திருவிதாங்கூரில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வீடு வாசல்களை இழந்து ஜனங்கள் பரதவித்தனர். நாகர் கோவிலில் ஆசிரியர்களும் மாணவர்களும் பள்ளிக்கூடத்தை மூடிவிட்டு, கஷ்டநிவாரண

வேலையில் ஈடுபட்டனர். மாணவர் கோஷ்டி ஒன்று நாஞ்சில் நாட்டின் வடபாகத்திற்கு (தோவாளைத் தாலுகா முழுவதும்) சுற்றுப்பிரயாணம் செய்யப் புறப்பட்டது. அக்கோஷ்டியின் தலைவர் ஜீவானந்தம், கிராமங்களில் சுற்றி, பிரசங்கங்கள் பல புரிந்து, அவதிப்படும் மக்களுக்காக நிதி திரட்டினார். சொல்வன்மையை—பிரசங்கத் திறமையை மக்கள் ஊழியத்திற்குப் பயன்படுத்த அவர் துணிந்தது அதுதான் முதல் தடவை.

இது முடிந்ததும் ஸ்தாபனம் கட்டும் வேலையைத் தொடங்கினார். மகாத்மா காந்தி வாசகசாலையைத் தோற்றுவித்தார். இது மட்டும் போதுமா? அரசியல் பேசுவது மட்டும் போதாது. "சுகாதாரத்திற்கு வழி" (Guide to Health) என்ற புத்தகத்தில் உடல் உறுதியும் வேண்டும் என்று காந்திஜி கூறுகிறார். "விவேகானந்தா புட்பால் டீம்" என்று கால்பந்து விளையாட்டுக் கோஷ்டி ஒன்றையும் ஜீவா சேர்த்து விட்டார். உடல் உறுதிமட்டும் போதாது! நம் தேசத்தின் கலையும் வளரவேண்டும். "ஞான பாஸ்கரன்" என்று ஒரு நாடகத்தை எழுதி, பள்ளித்தோழர்களைக் கொண்டு ஜீவா நடித்தார்! கலை பழைய போக்கிலேயே இருக்கக் கூடாது. ஜனங்களின் முன்னேற்றத்திற்கு உதவிசெய்யக் கூடியதாகவும் இருக்கவேண்டும். தேசத் தொண்டில் ஈடுபட்டுப் பல கஷ்டங்களைச் சமாளிக்கும் ஒருவனை கதாநாயகனாக அமைத்து "சுகுணராஜன் அல்லது சுதந்திர வீரன்" என்ற நாவலை எழுதினார் ஜீவா!

இவையெல்லாம் ஐந்தாம் பாரத்தில் படிக்கும் போது ஜீவாவால் எழுதப்பட்டவை என்பதை மறந்துவிடவேண்டாம்!

III

கொள்கைப் பிடிப்பு

ஹைஸ்கூலில் கடைசிவகுப்பில் படித்துக் கொண்டிருக்கும்போது, ஜீவாவிற்கு இருப்புக் கொள்ளவில்லை. பள்ளிப்படிப்பு காலத்தைவீண் விரயம் செய்வதாகப்பட்டது. "தேசத்தொண்டு செய்வதை விட்டுவிட்டு, பள்ளிக்கூடத்தில் உட்கார்ந்திருப்பதாவது" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டிருந்தார். பள்ளிக்கூடத்திற்கு ஒரு கும்பிடு. அவ்வளவுதான்.

கொள்கைப் பிடிப்பு இறுக்கிக்கொண்டே வந்தது. அவரைப் புரட்சிப்பாதையில் தள்ளிற்று. அவ்வூரில், மேல்ஜாதியினர் வசிக்கும் வீதியில் ஹரிஜனங்களின் காற்றே வீசக்கூடாது! காற்று பட்டாலும் பாபம். இந்த அநியாயத்தை அழிக்க வேண்டும் என்று அவர் ஹிருதயம் அடித்துக் கொண்டது. தன்னுடைய வாசகசாலையிலும், கால்பந்து விளையாட்டுக் கோஷ்டியிலும் ஒரு ஹரிஜன சிறுவனைச்சேர்த்துக்கொண்டார். மேல்ஜாதியினர் வசிக்கும் வீதிகள் வழியே தீண்டப்படாதார் வரக்கூடாதென்று தடுக்கப்பட்டிருந்த தேரோடும் தெருக்களின் வழியே அவனை அழைத்துச் சென்றார். அவ்வளவுதான்! ஊரிலே பெரிய புரட்சி!

மேல்ஜாதியினருக்கு மூக்கைப் பொத்துக் கொண்டு வந்தது கோபம். ஜீவாவின் தந்தை மகனுடைய 'தவறு'க்காக அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். வீட்டிற்கு வந்து மகனைக் கண்டித்தார். மகன் சாதாரண மகன் அல்ல. அப்

பாவைப்பணிவோடும் துணிவோடும்'' எதிர்த்தான்! தான் செய்ததுதான் சரி என்று விநயமாக வாதித்தான். பரம்பரைப் பழக்கத்திலே கட்டுண்ட அப்பா மகன்சொல்வதை ஒத்துக்கொள்ள வில்லை.

''தீண்டாமையை ஒழித்துத்தான் தீருவேன்'' என்றார் ஜீவா. ''கூடாது'' என்றார் தந்தை. ''என் கொள்கையை விட முடியாது. வீட்டை விட்டுவிடுகிறேன்!'' என்று சொல்லி, வீடுவாசல்களைத் துறந்து ஜீவா வெளியேறி விட்டார்.

இந்தக் கொள்கைப் பிடிப்பு அவரிடமுள்ள அபூர்வமான குணங்களில் ஒன்று. பல உதாரணங்களைக் கூறலாம். பள்ளி இறுதி வகுப்பில் படிக்கும்போது அவருடைய தாயார் காலமானார். ஆற்றங்கரைக்கு ஏராளமாக ஜனங்கள் வந்திருந்தனர். மூத்தமகன் என்ற முறையில் அவர்தான் ஈமச்சடங்குகளைச் செய்யவேண்டும். கோடி கட்டிக்கொண்டுதான் ''நீர்மாலை'' என்ற சடங்கைச்செய்ய வேண்டும் என்பது சம்பிரதாயம். கதர்த்துணியை உடுத்திக்கொண்டுதான் அவற்றைச் செய்வேன் என்று ஜீவா உறுதியுடன் கூறினார். அப்போதெல்லாம் இப்பொழுது கிடைப்பதுபோல் கதர்த் துணி கிடைப்பதில்லை. சுற்றுவட்டாரத்தில் கதர் தேடிச்சென்றவர்கள் வெறுங் கையுடன் திரும்பினர். தந்தையும், உறவினர்களும் மன்றாடினார்கள்; கெஞ்சினார்கள்; மிரட்டினார்கள். ஊர்ப்பெரிய மனிதர்களும் ஒருமுகமாகப் புத்திமதி சொன்னார்கள். தன் கொள்கையை ஒரு நொடிப்பொழுது கூட ஒதுக்கிவைக்க ஜீவா தயாராக இல்லை! இறுதியில் அவருடைய தம்பி, அண்ணன் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்து முடிக்கவேண்டியதாயிற்று.

இது நிற்க,

கொள்கைக்காக வீட்டைவிட்ட ஜீவா, நேராக சுசீந்திரம் என்ற ஊருக்குச் சென்றார். அங்கு தெருப்பிரவேச சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கும் தருவாயிலிருந்தது. தெருக்களில் ஹரிஜனங்கள் செல்லக்கூடாதென்ற சமூக அநீதி அங்கு பேயாட்டம் ஆடிக்கொண்டிருந்தது. உலகப் பிரசித்தி பெற்ற வைக்கம் சத்தியாக் கிரகத்தின் எதிரொலியாக சுசீந்திரத்திலும் சத்தியாக்கிரகம் செய்ய எற்பாடாயிற்று. ஜீவா அந்தப்போராட்டத்தில் குதித்தார். சத்தியாக் கிரகிகளின் முதல் கோஷ்டியின் தலைவரானார். வைதீக ஜாதி ஹிந்துக்கள் ஏவிவிட்ட குடிவெறியர்களின் மூங்கில்கழை அடிகளையும், வெற்றிலையை அதக்கி உமிழ்ந்த உமிழ்தல்களையும் வசைமாரிகளையும் பொறுத்து, சாத்வீக சத்தியாக்கிரகப் பரீட்சையில் தேறினார். "வழிவிடுவீர் வழிவிடுவீர்" என்று அவரால் ஆக்கப்பட்டு, சத்தியாக்கிரகத் தொண்டர்களால் பாடப்பட்ட பாட்டு, வீடுகளிலெல்லாம் எதிரொலித்தது.

IV

ஜாதிக்கொடுமைகளை எதிர்த்து அன்று ஒரு கிளர்ச்சி கிளம்பி கொண்டிருந்தது. ஹரி ஜனங்களுக்கு நீதிவழங்கவேண்டும் என்பதற்காக வீட்டைத்துறந்த ஜீவா அவ்வியக்கத்தினல் ஆகர்ஷிக்கப்பட்டதில் ஆச்சரியமில்லை.

பிரபல தேசபக்தரான ஸ்ரீ வா. வே. சு. ஐயர் அவர்களால் சேரமாதேவியில் அப்போது ஒரு ஆஸ்ரமம் நடத்தப்பட்டுவந்தது. "பரத்வாஜ் ஆஸ்ரமம்"

என்று அதற்குப்பெயர். பிராமண மாணவர்களுக்குமட்டும் ஒரு தனி இடத்தில் உணவு பறிமாறும் வழக்கம் அங்கு இருந்தது. "இது கூடாது; எல்லோருக்கும் ஒரே இடத்தில் உணவு பறிமாறப்படவேண்டும்" என்று ஈ. வே. ரா., வரதராஜ நாயுடு முதலியோர் கிளர்ச்சி செய்தனர்.

ஜீவா இந்தக்கிளர்ச்சியிலும் கலந்து கொண்டார். சிறந்த தேசிய வாதிகளையும் இக்கொடிய ஜாதிமதப்பேய் விடவில்லையே என்று நினைத்து மிகவும் வருந்தினர். இக்கொடுமையை ஒழிக்கக் கடுமையாகப் போராட வேண்டும் என்று உறுதி செய்துகொண்டார்.

நண்பர்கள் சிலருடன் செட்டி நாட்டிற்குச் சென்றார். காரைக்குடிக்கு அருகிலுள்ள சிராவயல் என்ற கிராமத்தில் தானே ஒரு ஆஸ்ரமத்தைத் தோற்றுவித்தார்; "காந்தி ஆஸ்ரமம்" என்று இதற்குப் பெயர். ஸ்ரீ கும்பலிங்கம் என்பவரைத் தலைவராகக்கொண்ட இவ்வாஸ்ரம நிர்வாகக் கமிட்டியில் பொதுக்காரியதரிசியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

பரத்வாஜ் ஆஸ்ரமத்திற்கு இது முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. அதில் காணப்பட்ட குறைபாடுகள் இதில் ஏற்படவேயில்லை. உயர்ந்த ஜாதியினரும், தாழ்த்தப்பட்டோரும் ஒரே வித மானவாழ்க்கையில்வாழ்வதற்குப்பழக்கப்பட்டனர். ஆண்களும் பெண்களும் சரிசமானமாக நடத்தப்பட்டனர். தேசியக்கல்வி போதிக்கும் பொருட்டு பள்ளிக்கூடங்கள் பல தொடங்கப்பட்டன.

ஹரிஜன சேரிகளில் இரவுப்பள்ளிக்கூடங்களும், நூல் நூற்கும் நிலையங்களும் நடத்தப்பட்டன.

பழைய தேசபக்தர்களின் மனோபாவத்திற்கும் இவ்வாஸ்ரமப்பழக்கத்திற்கும் எவ்வளவோ வித்தியாசமிருந்தது. தமிழ்ப்பண்பை அடிப்படையாகக்கொண்டு புதிய முறையில் மாணவர்களும் ஊழியர்களும் பயிற்றுவிக்கப்பட்டனர்.

ஜீவாவை தலைமை ஆசிரியராகக்கொண்ட ஒரு தேசீய கலாசாலைக்கு பழம்பெரும் தேசபக்தரான ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் ஒரு நாள் விஜயம் செய்தார்கள். சிறுவர்களும், சிறுமிகளும் இராட்டைகளைச் சுழற்றிக்கொண்டிருந்தனர்.

ஒரு சிறுவனைப் பார்த்து ஸ்ரீ பிள்ளையவர்கள் கேட்டார்கள் :

> " இங்கு பெண்கள் மட்டும் நூற்கிறார்களா,
> பையன்களும் நூற்கிறார்களா ?"
> " நாங்கள் எல்லோரும் நூற்கிறோம் "
> " பையன்கள் கூடவா ?" (!)
> " ஆமாம் !"

இதைக்கேட்டவுடன், "ஸ்டுபிட் ஆர்கானிசேஷன்" (ஒரு முட்டாள் தனமான ஸ்தாபனம்) என்று ஸ்ரீ பிள்ளையவர்கள் கோபத்தோடு வெடுக்கென்று கூறினார்கள்.

ஜீவாவிற்கு மனம் பொறுக்கவில்லை. அந்த வார்த்தைகளை ஆக்ஷேபித்தார். " தங்களைப் போன்ற பெரியார்கள் இப்படி ஒரு இயக்கத்தையே பழிப்பது அழகல்ல" என்று நிதானமாகவும் உறுதியாகவும் கூறினார்.

ஸ்ரீ பிள்ளையவர்கள் பெரியமனிதர். தன்மனதில் தோன்றியதைச் சொல்ல கணமும் தயங்காத ஆவேசமிக்க நேர்மையாளர். "வாளேந்த வேண்டிய கையை ராட்டுச்சுற்றவைப்பது என்றால் சகிக்க முடியாதது" என்றார்.

"தாங்கள் சொல்வது சரி; ஆனால்" என்று ஜீவா பேச ஆரம்பித்தார். "வாள் ஏந்தி ரத்தம் சிந்தினாலொழிய இந்தியாவிற்கு சுதந்திரமில்லையென்றால், போர்க்களத்தில் ரத்தம் சிந்துவதற்குக் கொஞ்சமும் தயங்காது உங்களோடு நின்று போராடத்தயாராக இருக்கும் என்போன்ற வாலிபர்கள் லட்சக்கணக்கில், சுதந்திர ஆர்வத்தால், இன்றைக்கு வேறு வழியில்லாததால் ஈடுபட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட ஒரு ஸ்தாபனத்தை ஒரேயடியாக "ஸ்டுபிட் ஆர்கனைசேஷன்" என்று தாங்கள் அவமதிப்பது எங்களுக்கு மிகுந்த மனவேதனையை அளிக்கிறது" என்றார் ஜீவா.

கண்யமிகுந்த பிள்ளை அவர்கள் தமது அபிப்பிராயத்தை வாபீஸ் வாங்கிக்கொண்டார். அன்று அதே இடத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ பிள்ளை அவர்கள் தலைமைதாங்கினார்கள். "பெண்கள் விடுதலை" எனும் பொருள் பற்றி வெகு நேரம் உருக்கமாக ஜீவா பேசினார். பெண் குலத்தின் மேன்மையையும், வீரத்தையும் வர்ணித்து உணர்ச்சியை அலையலையாகப்பெருக்கினார். இது முழுவதையும் கவனமாகக்கேட்டு வந்த ஸ்ரீ பிள்ளை அவர்கள். பெண்களைப் பற்றிய கருத்தையும் மாற்றிக்கொண்டு விட்டார். முடிவுரையில், "வேதம் நிறைந்த தமிழ் நாடு, உயர் வீரம் செறிந்த

தமிழ் நாடு என்று பாரதிகண்ட கனவு வீண்போக வில்லை'' என்று கூறி, ஜீவாவை வெகுவாகப் பாராட்டினார்.

பழைய தேச பக்தர்களின் பரம்பரையை அவர்களுடைய முன்னிலையிலேயே ஜீவா வளர்த்துக்காட்டினார்.

V
தமிழ்ப்பற்று

ஆஸ்ரமத்தில் தமிழ் நூல்களை ஜீவா திரும்பத் திரும்பப்படித்துப்பழகினார். தமிழ்ப்பற்று தனித் தமிழ் போதையாக மாறி விட்டது. தமிழ் மொழி தான் சிறந்த மொழி; அது வளர வேண்டும்; பிற மொழிக்கலப்பில்லாமல் பேசப்படவேண்டும்; எழுதப்படவேண்டும்! இந்த ஆசை அத்து மீறிப் போய்வெறியாகி விட்டது. ஆனால் இந்த வெறி தவறானது என்பதை வெகு சீக்கிரத்தில் ஜீவா உணர்ந்துகொண்டார்.

ஆஸ்ரமத்தில் ஒரு நாள் ஒரு கூட்டம் நடை பெற்றது. பிரபல எழுத்தாளரான வா. ரா. பிர சன்னமாயிருந்தார். "நாடும் இளைஞரும்" எனும் பொருள்பற்றி ஒரு மணி நேரம்வரை ஜீவா பேசினார். பிறமொழிச்சொல் ஒன்று கூட வரவில்லை! எல்லாம் தமிழ்! தனித்தமிழ்! செந்தமிழ்! கூடியிருந்தவர்கள் பிரமித்து விட்டனர்; மூக்கில் விரலை வைத்தனர். "இந்த மாதிரி பிரசங்கத்தை நான் கேட்டதே இல்லை" என்றார் வா. ரா. "இவ்விதம் பேசக்கூடியவர்கள் தமிழ் நாட்டில் வெகு சிலரே" என்று கூறி ஜீவாவைப் பாராட்டினார்.

அதோடு நின்று கொள்ளவில்லை. அவர் மேலும் கூறினர். "உங்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டின் நன்மையை உத்தேசித்து, தமிழ் மொழியின் வளர்ச்சியை உத்தேசித்து, தயவு செய்து இத்தனித்தமிழை விட்டு விடுங்கள். நீங்கள் என்ன தான் அபூர்வமாகப்பேசிய போதிலும், உங்களுடைய தனித் தமிழைப் பாமரமக்களால் புரிந்து கொள்ள முடியாது. இது ஜனங்களுடைய மொழியல்ல!"

இந்த வெறி எவ்வளவு தூரம் ஜீவாவைப் பிடித்திருந்தது என்பதற்குப்பல உதாரணங்களைக் கொடுக்கலாம். தோழர். ஸி. பி. இளங்கோ, 'கிருஷ்ணன்' என்ற தன்னுடைய பழைய பெயரைப் பறிகொடுத்தார்! "ஜீவானந்தம்" என்ற பெயர் "உயிர் இன்பன்" என்று மாறிவிட்டது!

இந்த வெறியை விட்டொழிக்கச் சமீபத்திலேயே ஜீவாவிற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதைப் பிறகு கவனிப்போம்.

VI

சுயமரியாதை

சமூகச் சீர்திருத்தம் செய்வதற்காகத்தோன்றிற்று சுயமரியாதை இயக்கம். ஜாதிக்கொடுமை, பெண் அடிமை, விதவைக்கொடுமை, மூடப்பழக்கங்கள், முதலியவற்றை சமூகத்திலிருந்து வேரோடு சாய்த்து வீழ்த்தவேண்டுமென்பது இதன் நோக்கம். அமுலில் காணும் தீங்குகளைக்கண்டதே யொழிய, அவற்றிற்கெல்லாம் சரித்திர பூர்வமான காரணம் என்ன என்பதை ஆராய்ந்து அறியவும்,

அந்தக்காரணத்தை வேரோடு சாய்த்து வீழ்த்தவும் அது எத்தனிக்கவில்லை. ஆனால் அந்தக்காலத்தில் இத்தீங்குகளைக்கண்டு ஒழிக்க வேண்டுமென்ற உணர்வு ஏற்பட்டதே பெரியகாரியம்!

ஈ. வே. ராமசாமி நாயக்கரும் அவரைச்சார்ந்த சிலரும் அவ்வியக்கத்தை வளர்த்துத் தீவிர பிரசாரம் செய்தனர்.

இளமையிலிருந்து சமூகக்கொடுமைகளை வெறுத்த ஜீவா அந்த இயக்கத்திலும் கலந்தார். "தகரென்றுகொட்டுமுரசே, பொய்மைச்சாதிவகுப் பினை யெல்லாம்!" என்ற பாரதியின் கீதம் அவருடைய காதுகளிலே ரீங்காரம் செய்துகொண்டிருந்தது. காந்திஜி சுதந்திர ஆர்வத்தைத் தட்டி எழுப்பினார். ஆனால் வர்ணாசிரமதர்மத்தை ஆதரித்தார். ஜீவா சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டார். வர்ணாசிரமதர்மத்தை உதறித்தள்ளினார்.

காந்திஜியின் முன்பாகவே இதைப் பச்சையாக எடுத்துக்கூறினார் ஜீவா.

மகாத்மா காந்தி சிலோனுக்குப் போகும்போது செட்டி நாட்டிற்கு விஜயம் செய்தார். ஆசிரம வாசிகள் சிலருடன் சென்று காரைக்குடியில் அவரை ஜீவா பேட்டிகண்டார். "உங்களுக்கு ஏதாவது சொத்து இருக்கிறதா?" என்று காந்திஜி கேட்டார்.

"தாய் நாடு தான் எங்களுடைய சொத்து!" என்று ஜீவா பதிலுரைத்தார். "இல்லை! நீங்கள் தான் தாய் நாட்டின் சொத்து" என்று காந்திஜி கூறினார்!

பிறகு அந்த ஆஸ்ரமத்திற்கு காந்திஜி விஜயம் செய்தார். ஐம்பது ஆயிரம் கஜம் நூல் அவருக்குக் காணிக்கையாக அளிக்கப்பட்டது. அதில் பத்தாயிரம் கஜம் நூலை ஜீவா தானே நூற்றுக்கொடுத்தார்! இது முடிந்ததும், காந்திஜிக்கு வரவேற்புப் பத்திரம் ஒன்று வாசித்தளிக்கப்பட்டது. அதில் வர்ணாசிரமதர்மத்தைக் கண்டித்து ஜீவா எழுதியிருந்தார்.

இது முடிந்த பின்பு, பாங்குனேரியில் ஜீவாவும், இன்னும் பல நண்பர்களும் சேர்ந்து காந்திஜியை ஒரு கேள்வி கேட்டனர்.

"குணத்திற்கும், கருமத்திற்கும் தக்கப்படி நான்கு வர்ணங்களை நான் சிருஷ்டித்திருக்கிறேன் என்ற கீதாவாக்கியம் உங்களுக்கு உடன்பாடு அல்லவா?"

காந்திஜி : ஆம்.

நண்பர்கள் : அப்படியானல் நீங்கள் சாத்வீகத் தன்மையிலும், நன்னெறி ஒழுக்கத்திலும் சிறந்தவராக விளங்குவதனுல், நீங்கள் ஒரு பிராமணன் அல்லவா? பிராமணனுகப் பிறந்து தீய ஒழுக்கமுடைய ஒருவன் சூத்திரன் தானே?

காந்திஜி : இல்லை. நான் நல்ல வைசியன். தீய ஒழுக்கங்களையுடைய பிராமணன் கெட்ட பிராமணன்.

இத்துடன் ஜீவாவும், அவருடைய நண்பர்களும் இந்தப் பேச்சை நிறுத்திக்கொண்டு விட்டனர்.

இந்த நிகழ்ச்சிக்குப்பின், ஜீவாவின் சுயமரியாதை இயக்ககருத்துகள் தீவிரப்பட்டன. அந்த ஆஸ்ரமத்தின் தலைவரான ஸ்ரீ கும்பலிங்கத்துக்

கும் ஜீவாவிற்கும் அபிப்பிராய பேதம் முற்றி விட்டது. அரசியலிலும், சமூகச்சீர்திருத்தத்திலும், மதக்கோட்பாடுகளிலும் இருவருக்கும் அபிப்பிராய பேதம் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது.

ஜீவா அந்த ஆஸ்ரமத்தை விட்டு வெளியேறி விட்டார். சில ஆசிரியர்களையும், மாணவர்களையும் அழைத்துக்கொண்டு அவ்வூருக்கு அருகிலிருக்கும் நாச்சியாபுரம் என்ற கிராமத்தில் புதிய ஆஸ்ரமம் ஒன்றை ஸ்தாபித்தார். இதற்கு "உண்மை விளக்க நிலையம்" என்ற பெயர் கொடுக்கப்பட்டது. சுதந்திர இயக்கமும், சுயமரியாதை இயக்கமும் ஒன்றாக இணைக்கப்பட்டது இந்நிலையத்தில்!

VII

மூன்று சக்திகள்

1927-ம் வருடம் ஜீவாவை மூன்று வித சக்திகள் பிடித்து இழுத்தன. சுதந்திரம் ஒரு புறம்; சமூகச் சீர்திருத்தம் மறுபுறம்; தமிழ்ப்பற்று இன்னொரு புறம்.

அவ்வருடத்தில் சுயமரியாதை மகா நாடு செங்கல்பட்டில் நடந்தது. ஜீவா அதில் கலந்து கொண்டார். சமூகக்கொடுமைகளைக் கண்டித்துச் சண்டமாருதம் போல் சொற்பொழி வாற்றினார்.

அதே வருடம் சென்னையில் அகில இந்தியக் காங்கிரஸின் வருடாந்திர மகா நாடு கூடியது. ஜீவா அதற்கும் சென்றார். பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தினிடமிருந்து தாய் நாட்டின் சுதந்திரத்தை அடைவதில் தன் ஆர்வத்தைக்காட்டினார்.

அம்மகா நாடு முடிந்ததும், தனித்தமிழே உரு வெடுத்து வந்தாற்போலிருக்கும் மறைமலை அடி களை (சுவாமி வேதாசலம்) பார்ப்பதற்காகப் பல்லா வரத்திற்குப்போனார்.

முதல் இரண்டு சக்திகளும் வெற்றிபெற்றன. இம் மூன்றாம் சக்தி தோல்வியுற்றது.

மறைமலையடிகளின் வீட்டு வாசற்படியில் ஏறும் போது அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது, ஏனெனில், அப்போது உள்ளே இருந்த அடிகள் "யாரது? போஸ்ட்மேனா?" என்று கேட்டார். தனித்தமிழின் உருவம் ஆங்கிலப்பதத்தை உபயோகிக்கிறதே என்பதனால் தான் அந்த ஆச்சரியம்.

எனினும், பொறுமையுடன் உள்ளே சென்றார். வழக்கப் பிரகாரம், "என்ன காரணம் பற்றி வந்தீர் கள்?" என்று ஸ்வாமி விசாரித்தார். விவாதம் தொடங்கி விட்டது!

"காரணம் என்பது தமிழ்ச் சொல்லா, பிற மொழிச்சொல்லா?"

"எம்மொழிச்சொல் என்று இன்னும் முடிவு கட்டப்படவில்லை"

"ஏது, மூலம், எனும் சொற்கள் தமிழ்ச்சொற் கள் தாமே?"

"ஆம்!"

"அங்ஙனமாயின் ஏது, மூலம் ஆகிய சொற் களைப் புழங்குதல் அன்றோ சால் புடைத்து?"

"ஆம்!"

ஆகவே, இந்த விவாதத்திலேயே ஜீவாவிற்கு ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்து விட்டது. தனித் தமிழ்ச்சொற்களை மட்டும் உபயோகிப்பது என்பது அசாத்தியம். எல்லா ஜனங்களாலும் புரிந்து கொள்ள முடியாது. அதோடு, தமிழ் மொழியை வளர்ப்பவர்கள் —— புதிய புதிய வார்த்தைகளைப் பழக்கத்தில் கொண்டு வருபவர்கள் —— பாமரமக்களேயொழிய பண்டிதர்கள் அல்ல. பண்டிதர்கள் இஷ்டப்படி தமிழ் வளராது. மக்களின் தேவைக்குத்தக்கபடி, மக்களே அதை வளர்க்கிறார்கள்.

மறைமலையடிகள் தனித்தமிழைப்பற்றிப் பேசாமல், பேச்சை வேறுவழியில் திருப்பினார். நூல் நூற்பதையும்,கதர்கட்டு வதையும் தாக்கிப்பேசினார். ஜீவா கதரை ஆதரித்து சண்டைபோட்டுச் பேசி விட்டுத் திரும்பிவிட்டார்.

காங்கிரஸ் சமூகச் சீர்திருத்தத்தை கவனிக்கவில்லை. சுயமரியாதை இயக்கம் நாட்டுச் சுதந்திரத்தை கவனிக்கவில்லை. தனித்தமிழ் இவ்விரண்டையும் புறக்கணித்ததோடு, ஜனங்களையும் கவனிக்கவில்லை! காங்கிரஸ் இயக்கத்தின் சுதந்திர லக்ஷியத்தையும், சுயமரியாதை இயக்கத்தையும், ஜனங்கள் புரிந்து கொள்கிற தமிழ் மொழியையும் நாடு முன்னேற்றமடை வதற்கு ஒன்றாக இணைக்கவேண்டும் என்ற வழியில் ஜீவானந்தம் சிந்தனை செய்ய முற்பட்டார். இந்த சந்தர்ப்பத்தில் தான் மீரத் (கம்யூனிஸ்டு) சதிவழக்கைப்பற்றிய செய்திகள் வந்துகொண்டிருந்தன.

VIII

போராட்ட அனுபவம்

இவ்விதம் சிந்தனை செய்து கொண்டிருக்கும் போது, 1930-ம் வருடத்தில் சத்தியாகிரகப் போராட்டம் தொடங்கி விட்டது.

ஆஸ்ரமத்தைக்கவனித்து வந்த ஸ்வாமி ஆத்மராமும், ஜீவாவும் வேதாரண்யத்திற்குப் புறப்பட்டுப் போனார்கள். ஆனால், இவர்கள் இருவரும் சென்று விட்டால் ஆஸ்ரமத்தை கவனித்துக் கொள்ள வேறுயாரும் இல்லை. ஆதலின் ஜீவா திரும்பி விட வேண்டும் என்று ஸ்வாமி ஆத்மராமும் மற்ற அன்பர்களும் வற்புறுத்தினார்கள். ஜீவா திரும்பி வந்து விட்டார்.

எனினும், அவர் ஆஸ்ரமத்திலேயே அடை பட்டுக்கிடக்கவில்லை.

சென்னையில் போலீஸ் அடக்கு முறை எல்லையை மீறி விட்டது. தொண்டர்கள் அடித்து வீழ்த்தப்பட்டார்கள். ஆறுபோல் இரத்தம் ஓடிற்று. அச்சமயத்தில் ஈரோட்டில் சுயமரியாதை மகா நாடு கூடிற்று. போலீஸ் அடக்கு முறையை வன்மையாகக் கண்டித்து ஒரு தீர்மானம் விஷயாலோசனைக் கமிட்டியில் வந்தது. ஜீவா அதை ஆதரித்து உணர்ச்சி ததும்பப் பேசினார். "ஜாதி, மத விவகாரங்களில் மட்டும் நம் சுய மரியாதையைப் பாதுகாத்துக்கொண்டால் போதாது. அரசியல் விவகாரங்களிலும் நம்சுயமரியாதையைப் பாதுகாத்துக்

கொள்ளவேண்டும்'' என்று கூறி எல்லோருடைய சுயமரியாதை உணர்ச்சியையும் தட்டி எழுப்பினார்.

இம்மகாநாடு முடிந்து ஆஸ்ரமத்திற்குத் திரும்பியதும் ஒரு துர்பாக்கியமான நிகழ்ச்சி நிகழ்ந்தது. அவர் செய்த ஹரிஜனத்தொண்டையும், மதுவிலக்குப் பிரசாரத்தையும் கண்டு ஆத்திரங்கொண்ட அவரைக் கத்தியால் குத்திவிட்டனர். கையிலே ஆழமான வெட்டு! மிகவும் அபாயகரமான நிலைமையில் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச்செல்லப்பட்டார். படுக்கையைவிட்டு எழுந்திருந்துநடமாடப் பலவாரங்கள் பிடித்தன. (இன்றைக்கும் அவருடைய உடம்பில் முத்திரை வைத்தாற்போலிருக்கின்றன அத் தழும்புகள்.)

இந்தக் காலத்தில் சோஷியலிஸ்ட், கம்யூனிஸ்ட் கருத்துக்கள் கொஞ்சங்கொஞ்சமாக நாட்டில் தலை தூக்க ஆரம்பித்தன. மீரத் சதி வழக்கைப்பற்றிய செய்திகள் பரவி வந்தன. சோவியத் ரஷ்யாவிலிருந்து புதிய செய்திகள் எட்டின.

1931-ம் வருடத்தில் விருதுநகரில் நடந்த சுயமரியாதை மகாநாட்டிற்கு ஜீவா சென்றார். தீர்மானங்களை உருவாக்குவதில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டார். உலகிலுள்ள மதங்களையெல்லாம் எதிர்த்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதை ஆதரித்துப் பேசும்போது, "மதம் மக்களுக்கு அபினி போன்றது" என்று மார்க்ஸின் கருத்தை வெளியிட்டார்.

அதே வருடம் ஈரோட்டில் இன்னொரு மகாநாடு நடைபெற்றது. இதற்கு "நவஜவான் மகாநாடு"

என்று பெயர். லாஹூர் சதிவழக்குத் தியாகியும், சிறையில் 63-நாள் வரைஉண்ணாவிரதமிருந்துஉயிர் விட்டவருமானஜதீந்திரதாஸின்சகோதரர் கிரன்தாஸ் இதற்குத் தலைமை வகித்தார். ஜீவா இம் மகாநாட்டிலும் பங்கெடுத்துக்கொண்டார். மீரத் சதிவழக்கைப் பற்றிப் படிக்கும்போது ஏற்பட்ட உணர்ச்சியும், எண்ணங்களும் இம் மகாநாட்டின்போது ஒரு உருவத்தை அடையக்கூடிய நிலையில் இருந்தன. முழு உருவத்தையும் அடைவதற்கான சந்தர்ப்பம் சமீபத்திலேயே ஏற்பட்டது.

சத்தியாக்கிரஹப் போராட்டம் வலுத்துவிட்டது. நாச்சியாபுரத்திலிருந்த ஆஸ்ரமத்தைக் கோட்டையூருக்கு மாற்றி, ஜீவா காங்கிரஸ் வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டார். கள்ளுக்கடை மறியலுக்குத் தலைமை வகித்து வெற்றிகரமாக நடத்தினார்.

1932-ல் காரைக்குடியில் போராட்டக் கமிட்டி நிறுவப்பட்டது. அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். போராட்டம் வலுக்கவே, கைது செய்யப்பட்டார். ஒரு வருடம் கடுங்காவல் தண்டனையை அளித்தது அதிகார வர்க்கம்.

சிறை கலாசாலையாகவும், சிந்தனை மண்டபமாகவும் மாறிவிட்டது! வங்காளப் புரட்சிக்காரர்களான ஜீவன்லால்கோஷ், சட்டர்ஜி முதலியவர்களையும், லாஹூர் சதிவழக்குக் கைதிகளான புத்தகேஸ்வர்தத், குந்தர்லால் முதலியவர்களையும் சந்தித்தார். சோஷியலிஸம், கம்யூனிஸம், சோவியத் யூனியன் முதலியவற்றைப் பற்றி அவர்களிடம் விவாதித்தார். இவற்றைப்பற்றி அவர்கள்

கொடுத்த புத்தகங்களை யெல்லாம் ஆழ்ந்த கவனத்துடன் வாசித்தார். தன் அனுபவங்களையெல்லாம் நினைவு படுத்திக்கொண்டார். ஏற்கனவேயே அவர் மனதில் வளர்ந்து வந்த கம்யூனிஸ்டுக் கருத்துக்கள் சரியான உருவத்தைை எடுத்து விட்டன! உலகிலுள்ள துன்பங்களெல்லாம் ஒழிய வேண்டுமானால், சமூகக் கொடுமைகளெல்லாம் மடியவேண்டுமானல், கல்வி, கலை, விஞ்ஞானம் முதலியவை தடங்கலின்றி வளரவேண்டுமானல், மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானல்—சமூகச் சீர்திருத்தம் மட்டும் போதாது! சமூகப் பொருளாதார அமைப்பையே மாற்றவேண்டும்! சமதர்ம அஸ்திவாரத்தில் அதைக் கட்டவேண்டும்.

1933-ம் வருடம், சுயமரியாதை இயக்கத்தையே மாற்றி அமைத்தது. கம்யூனிஸ்டுக் கருத்துக்களைப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்த தோழர் சிங்காரவேலு செட்டியார் அப்பொழுது சுயமரியாதை இயக்கத்திலும் ஈடுபட்டார். ஈ. வே. ராமசாமி நாயக்கரும், எஸ். ராமநாதனும் சோவியத் யூனியனை நேரில் பார்த்துத் திரும்பினர். சோஷியலிஸ்டு கருத்துக்களுடன் ஜீவாவும் சிறையிலிருந்து வெளி வந்தார். சுயமரியாதைக் கூட்டங்களிலெல்லாம் சோஷிலிஸமும் கம்யூனிஸமும் பேசப்பட்டது!

"குடியரசு", "பகுத்தறிவு", "புரட்சி" முதலிய பத்திரிகைகளில் ஜீவாவின் கட்டுரைகள் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்பட்டன. பழைய ஸ்லோகங்களுடன் புதிய ஸ்லோகங்கள் சேர்ந்தன. ஜமீன்தாரி முறை ஒழிக! லேவாதேவி ஒழிக! சுரண்டல்

ஒழிக! புரட்சி ஓங்குக! உலகத் தொழிலாளர்களே ஒன்றுசேருங்கள்! தொழிலாளர் கோட்டை சோவியத் யூனியன் நீடுழி வாழ்க!

ஜமீன்தார் அல்லாதார் மகாநாடுகளும், லேவாதேவிக்காரர் அல்லாதார் மகாநாடுகளும் கூட்டப்பட்டன. சுரண்டும் கும்பல்கலங்கிற்று!

இந்த அரசியல் பணியோடு, தமிழ்மொழிக்கும் கலைக்கும் தொண்டுசெய்தார். 1934-ல் "தமிழன்பர்கள் மகாநாட்டில்" கலந்துகொண்டார். "மதத்தையும், மூடப் பழக்கங்களையும் புகுத்தாமல் தமிழ் இலக்கியத்தை வளர்க்கவேண்டும்" என்று அவர் பேசியதை அங்கு கூடியிருந்த தமிழன்பர்கள் அவ்வளவு பேரும் பாராட்டினார்கள். அதே வருடத்தில் நடந்த "தமிழ் நடிகர்கள் மகாநாட்"டிலும் ஜீவா கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார். மக்களுடைய முன்னேற்றத்திற்கு உதவி செய்யக்கூடிய வழியில் நாடகக்கலையை எப்படி வளர்ப்பது என்று நீண்டநேரம் பேசினார்.

IX

சமூகச் சீர்திருத்தத்திலிருந்து புரட்சிக்கு

1934-ம் வருடத்தில் மத்திய சட்டசபைகளுக்குத் தேர்தல் வந்தது. தேர்தல் ஒரு பரீக்ஷை என்பது நமக்குத்தெரியும். யார் எவருடன் சேருகிறார். என்ன செய்ய விரும்புகிறார் என்பதைப் புரிந்துகொள்ளலாம். சுயமரியாதை இயக்கத்திற்கும் இப் பரீக்ஷை வைக்கப்பட்டது. அடுத்த படியாக சமூகப் புரட்சிக் கட்டத்தை நோக்கி முன்னேறுவதா அல்லது சீர்திருத்தத்தோடு நின்றுவிடுவதா என்பதே கேள்வி.

சமூகப் புரட்சிப்பாதையை நோக்கி அதை ஜீவானந்தம் இழுத்தார். இதற்கு ஈ. வே. ரா. தயாராக இல்லாததோடு, பின்னுக்குப் பிடித்து இழுக்கவும் முற்பட்டார்! அதிகாரவர்க்கத்தின் மிரட்டலைக் கண்டு பயந்ததோடு, அந்த அதிகாரவர்க்கத்தின் நண்பர்களாக விருந்த சர். ஷண்முகம் செட்டி போன்றவர்களுடன் கூட்டுறவு ஏற்படுத்திக் கொள்ளவும் தொடங்கினர்.

ஜீவாவின் சோஷியலிஸ்ட் பிரசார வேகம் முன்னைவிட பன்மடங்கு அதிகமாயிற்று. "சமதர்மம்" என்ற பத்திரிகையைத் தொடங்கி, ஜோலார்பேட்டையிலிருந்து பிரசுரித்தார். படித்தோர் உள்ளத்தைக் கவரும் கட்டுரைகள் வெளிவந்தன. இந்தியாவெங்கும் பிரசித்திபெற்ற புரட்சிவீரன் பகத்சிங் எழுதிய, "நான் ஏன் நாஸ்திகன்?" என்ற புத்தகத்தைத் தமிழில் வெளியிட்டார். அதிகாரவர்க்கம் சீறி எழுந்தது. அப்புத்தகத்தைத் தடுத்துப் பறிமுதல் செய்தது. ஜீவாவைச் சிறையில் தள்ளிற்று.

1935-ல் திருத்துறைப் பூண்டியில் நடந்த சுயமரியாதை மகாநாடு இரண்டு சக்திகளையும் வெவ்வேருகப் பிரித்துவிட்டது. ஜமீன்தார்கள், சர்க்கார் தாஸர்கள், பிற்போக்கிலே ஊறிய நிலச்சுவான்தார்களைக் கொண்ட ஜஸ்டிஸ் கட்சியை பகிரங்கமாக ஈ. வே. ரா. ஆதரித்தார். அதை ஜீவா எதிர்த்தார். "ஈ. வே. ரா. சுயமரியாதைக்காரர் அல்ல. சமதர்மமான சோஷியலிஸத்திற்காகப் போராடுபவர் அல்ல; ஜமீன்தார்களின் எதிரி அல்ல; லேவாதேவிக்காரர்களின் விரோதி அல்ல! அவருடைய

சொல்லும் செயலும் சுயமரியாதை இயக்கத்திற்கு பலம் தராது. ஆனால் வரவர பலஹீனப்படுத்தி வருகிறது. கடவுளானாலும் காந்தியானாலும் சொல்வது பகுத்தறிவுக்குப் பொருந்தாவிட்டால் தள்ளிவிட வேண்டுமென்கிறோம். அப்படியானால் ஈ.வெ.ரா. சொல்வது பகுத்தறிவுக்குப் பொருந்தாவிட்டால் வாலிபர்களாகிய நாம் என்னசெய்ய வேண்டும்'' என்று ஜீவா மகாநாட்டுப் பிரதிநிதிகளை நோக்கி ஆவேசத்தோடு கேட்டார். எத்தகைய பதிலும் கிடைக்கவில்லை.

மேலும், ''மூடப்பழக்கங்கள், ஜாதிக்கொடுமைகள், சுரண்டல் முறைகள் முதலியவை ஒழிந்த சுதந்திர தமிழ்நாட்டைக் காண விரும்பும் வாலிபர்களெல்லோரும் ஈ.வே.ராவின், தலைமையை உதறித் தள்ளிவிட்டு சோஷியலிஸ்ட் புரட்சிப்பாதையில் முழுவேகத்துடன் முன்னேறவேண்டும்'' என்று வாலிபர்களை ஜீவா கூவி அழைத்தார். தலைவர் பக்தியைவிட கொள்கைப் பிடிப்பில் உறுதி கொண்ட வாலிபர்கள்எல்லோரும் ஜீவாவின் பக்கம் சேர்ந்தனர்.

ஈ.வே.ராவின் போக்கில் அதிருப்தியும், சமதர்மப் பிரசாரத்தில் தீவிர ஈடுபாடுமுடைய எல்லோரையும் சேர்த்து ''சுயமரியாதை சோஷியலிஸ்ட் கட்சி''யை ஜீவா அமைத்தார்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் சென்னையிலிருந்த சிறு கம்யூனிஸ்டு கோஷ்டியுடன் ஜீவாவிற்குத் தொடர்பு ஏற்பட்டது.

X

கம்யூனிஸ்டுக் கட்சி

கம்யூனிஸம் என்ற பெயரைக் கேட்டாலே அதிகாரவர்க்கம் நடுங்கிற்று. அப்போது இக்கட்சி சட்ட விரோதமாக இருந்தது. அகில இந்திய ரீதியில் ஒழுங்காக நிறுவப்படவில்லை.

அமீர் ஹைதர்கான் என்ற பிரபல கம்யூனிஸ்டுத் தலைவர் சென்னைக்கு வந்தார். அச்சுத் தொழிலாளிகளையும், டிராம்வேயிலும், ரயில்வேயிலும், பி. அண்டு. ஸியிலும் வேலைபார்த்த தொழிலாளர்களையும் கொண்ட "எங்மார்க்ஸிஸ்ட் லீக்" என்று ஒரு சங்கத்தை அமைத்துவிட்டுச் சென்றார். இத்தச் சங்கத்தின்மீது உடனே சர்க்கார் தடை உத்தரவைப் பிறப்பித்தது. இதில் ஈடுபட்ட தொழிலாளர்களில் பலர் முதலாளிகளால் பழிவாங்கப்பட்டார்கள்.

உடனே அந்த தோழர்களையெல்லாம் திரட்டி ஏ. எஸ். கே. அய்யங்காரும், P. சுந்தரய்யாவும் "தொழிலாளர் பாதுகாப்புச் சங்கம்" (Labour Protection League) என்ற பெயரில் ஒன்று சேர்த்தார்கள். இச் சங்கத்துடன்தான் ஜீவா தொடர்பேற்படுத்திக்கொண்டார்.

1935-ல் இச் சங்கத்தின் முயற்சியால் அகில இந்திய அச்சுத்தொழிலாளர் மகாநாடு சென்னையில் கூட்டப்பட்டது. இம் மகாநாட்டில் கலந்துகொண்ட ஜீவா பம்பாயிலிருந்து வந்திருந்த கம்யூனிஸ்டுகளான எஸ். வி. காட்டே, சித்லே முதலியவர்களை முதன்முதலில் சந்தித்தார்.

இந்தப் பழக்கங்களால் கம்யூனிஸ்டு கட்சியைப் பற்றியும் அதனுடைய அன்றைய நடைமுறைகளைப் பற்றியும் சரிவர புரிந்துகொள்ள முடிந்தது. அதன் கொள்கைகள் நாளுக்குநாள் அதிக ஆழமாக அவர் மனதில் பதிந்தன. அப்போது "அறிவு", "புது உலகம்" ஆகிய பத்திரிகைகளில் தொடர்ச்சியாக அவர் எழுதிவந்த கட்டுரைகளைப் படித்தால் இது நன்கு தெரியும்.

முற்போக்கு இயக்கத்தின் அம்சங்கள் யாவையும் கம்யூனிஸ்டுக் கட்சி தன்னுடன் அணைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார்.

ஏகாதிபத்யம் ஒழிக!
முதலாளித்வம் ஒழிக!
நிலப்பிரபுத்வம் ஒழிக!
ஜாதிக்கொடுமைகள் ஒழிக!
பெண் அடிமை ஒழிக!
மூடப்பழக்கங்கள் ஒழிக!
புரட்சி ஓங்குக!
சமதர்ம சமுதாயம் ஓங்குக!
பாட்டாளிகள் அரசாங்கம் ஓங்குக!
உலகத் தொழிலாளர்களே
ஒன்றுசேருங்கள்!

எந்த லக்ஷியத்திற்காக வீட்டைவிட்டு வெளியேறினாரோ, எந்த லக்ஷியத்திற்காக ஆஸ்ரமத்தை நடத்தினாரோ, எந்த லக்ஷியத்திற்காக சுதந்திரப் போரில் கலந்துகொண்டாரோ, எந்த லக்ஷியத்திற்

காக ஏழைமக்களை நேசித்தாரோ, அந்த லக்ஷியங்களுக்காகவே கம்யூனிஸ்டுக் கட்சி போராடுவதை ஜீவானந்தம் தெளிவாகப் பார்த்தார். தன் வாழ்நாளில் எதையெதை எல்லாம் உயர்ந்ததென்றும், நல்லதென்றும் அவர் நினைத்தாரோ, அவையெல்லாம் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கையிலும், வேலை முறையிலும், திட்டத்திலும் இருப்பதை அவர் கண்டார். ஆதலின் அக்கட்சியை அவர் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் மனமார நேசித்தார்.

மற்றக் கட்சிகளைப்போலல்ல கம்யூனிஸ்டுக் கட்சி. சட்டவிரோதமான காலத்தில் அதில் அங்கத்தினராகச் சேருவதென்பது சாமான்ய காரியம் அல்ல. கட்டுப்பாட்டை விட்டு ஒரு அணு அளவேனும் மீறக்கூடாது. கட்சி கொடுக்கும் திட்டம் ஒவ்வொன்றையும் நிறைவேற்ற வேண்டும். எத்தகைய ஆபத்து வந்தபோதிலும் ஜனங்களை விட்டு நகரக்கூடாது. அவர்களிடையே வாழ்ந்து அவர்களுக்கே சேவைசெய்யவேண்டும். அவர்களுடைய போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி நடத்தவேண்டும். இவற்றையெல்லாம் சரிவர செய்து காட்டித் தன்னுடைய தகுதியை நிரூபித்துக் காட்டவேண்டும். தகுதியற்றவர்களுக்குக் கட்சியில் இடமில்லை.

ஜீவானந்தம் எல்லா நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டார். தன் தகுதியை நிரூபித்துக் காட்டி, கட்சியின் நம்பிக்கையைப் பெற்றார். அன்றுமுதல் அவர் ஒரு கம்யூனிஸ்டு. ஆனால் வெளியில் யாருக்கும் தெரியாது. அவரை ஒரு சோஷியலிஸ்டு என்றே நினைத்து வந்தனர்.

XI

தமிழ்நாடு காங்கிரஸ் சோஷியலிஸ்டுக் கட்சி

இந்தக் காலத்தில்தான் அகில இந்திய காங்கிரஸ் சோஷியலிஸ்டுக் கட்சி அமைக்கப்பட்டிருந்தது. கம்யூனிஸ்டுகள் அதனுடன் சேராமலிருந்தார்கள். ஏனெனில், இன்றைய பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஆட்லி எத்தகைய சோஷலிஸ்டோ அதே போன்ற சோஷலிஸ்டுகள்தான் காங்கிரஸ் சோஷியலிஸ்டுக் கட்சியினர்,

இந்த சோஷலிஸ்டுக்களின் பரம்பரையைக் கம்யூனிஸ்டுகள் அனுபவத்தில் நன்கு அறிவார்கள். அநேக வேலை நிறுத்தப் போராட்டங்களில முதலாளிகளுடன் அவர்கள் சேர்ந்துகொண்டதைப் பார்த்திருக்கிறார்கள். தொழிலாளர்களின் தனியொரு அரசாங்கமான சோவியத் யூனியனைத் திட்டி, பாஸிஸ்ட் அரசாங்கமான ஹிட்லரின் ஜெர்மனியை அவர்கள் புகழ்வதைக் கேட்டிருக்கிறார்கள். ஆதலின், "காங்கிரஸ் சோஷியலிஸ்டுக் கட்சி"யுடன் கம்யூனிஸ்டுகள் சேராமலிருந்தனர்.

எனினும், 1935-ல் காங்கிரஸிலுள்ள இடதுசாரி கோஷ்டிகளை பலப்படுத்திக் காங்கிரஸை தீவிர பாதையில் செல்லச் செய்வது அவசியம் என்று கம்யூனிஸ்டுகள் உணர்ந்தனர். கம்யூனிஸ்ட்கட்சி சட்ட விரோதமானபடியால் சோஷலிஸக் கொள்கைகளைப் பரப்ப முடியாதிருந்தது. அதற்காகக் காங்கிரஸ் சோஷியலிஸ்டுக் கட்சியில் சேர்ந்து வேலை செய்வது என்று முடிவுகட்டினர்.

ஜயப்பிரகாஷ் நாராயணனும், மஸானியும் தமிழ்நாட்டில் இக்கட்சியை அமைக்க பகிரதப் பிரயத்தனம் செய்து பார்த்தனர். ஆதரவு கிடைக்கவில்லை. முயற்சியைக் கைவிட்டனர். இந்த சந்தர்ப்பத்தில் கம்யூனிஸ்டுகள் அக் கட்சியில் சேர்ந்தனர். தமிழ் நாட்டிலும் அதன் கிளையை ஸ்தாபித்துப் பலப்படுத்த முன்வந்தனர்.

தமிழ்நாட்டிற்கு ஒரு ஆர்கனைசிங் கமிட்டி நிறுவப்பட்டது. தோழர் ஸ்ரீனிவாசராவ் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ்நாடெங்கும் இக்கட்சியை அமைக்கும் பொறுப்பு ஜீவாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஜீவா இப்பொறுப்பை வெற்றிகரமாக நிறைவேற்றினர் என்பது சொல்லாமலே விளங்கும். 1936-ல் திருச்சியில், 'சுயமரியாதை சோஷியலிஸ்டு கட்சி''யின் மகாநாட்டை ஜீவா கூட்டினர். கம்யூனிஸ்டுக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரான தோழர் எஸ். ஏ. டாங்கே தலைமைவகித்தார். இக்கட்சியை அப்படியே காங்கிரஸ் சோஷியலிஸ்டுக் கட்சியுடன் இணைத்துவிடுவது என்று பிரதிநிதிகள் முடிவுகட்டினர்.

1936-ல் சென்னை மாகாண தொழிற்சங்க காங்கிரஸ் (M. P. T. U. C.) அமைக்கப்பட்டது. அதன் தலைவராகத் தோழர் ஜீவாவும் காரியதரிசியாகத் தோழர் சுந்தரைய்யாவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதே வருடத்தில், தமிழ் நாடு காங்கிரஸ் சோஷியலிஸ்டுக் கட்சியின் மகாநாடு சேலத்தில் கூடிற்று. அதன் பொதுக் காரியதரிசியாகத் தோழர் ஜீவா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

XII

காங்கிரஸில்

தன்னலமற்ற சேவையாலும், கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு நடப்பதில் தவருததாலும் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் ஊழியர்களின் நன்மதிப்பை ஜீவா பெற்ருர். ஜீவா நடத்தும் வாழ்க்கையிலாகட்டும், பேசும் பேச்சிலாகட்டும் யாரும் எந்தவிதமான குறையையும் கூற முடியாது. அவர்மீது தாங்கள் வைத்திருந்த நம்பிக்கையைப் பல தடவை காங்கிரஸ் ஊழியர்கள் வெளிப்படுத்தி யிருக்கின்றனர்.

1937-ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வேலூரில் கூடிற்று. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினராக அதில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே கூட்டத்தில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஒரு தீர்மானத்தைப் பிரரேபித்தார். மந்திரிசபைகளைக் காங்கிரஸ் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று அ. இ. கா. கமிட்டிக்கு அத்தீர்மானம் சிபார்சு செய்தது. சத்தியமூர்த்தியின் பேச்சுத் திறனை எல்லோரும் அறிவார்கள். அன்று தன் முழுத்திறனையும் அவர் காட்டினுர். பெரும்பாலான அங்கத்தினர்கள் அவர் சொன்னதை ஏற்றுக்கொண்டனர். ஆனல் ஜீவா அந்தத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினுர். ஆரம்பத்தில் 30 பேர்தான் அவரை ஆதரித்தனர். அரைமணிநேரம் பேசிய பிறகு 133 பேர் ஜீவாவை ஆதரித்து ஓட்டுப்போட்டனர்.

1938-ல் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினராக ஜீவா தேர்ந்தெடுக்கப்பட்டார். (அடுத்த வருடத்திலும் அவரையே காங்கிரஸ்

கமிட்டித் தலைவர் காரியக்கமிட்டிக்குப் பொறுக்கி எடுத்துக்கொண்டார்.) இந்தத் தடவை அவரை எதிர்த்துத் தமிழ்நாடு காங்கிரஸின் மாஜி தலைவரான ஸ்ரீமதி. ருக்மணி லக்ஷ்மிபதி போட்டியிட்டார். வலது சாரி கோஷ்டி முழுவதும் அவருக்காக வேலை செய்தது. மாஜிதலைவர் என்ற பெருமை வேறு சாதாரணமாக உபயோகிக்கப்பட்டது. எனினும் அவரை ஊழியர்கள் தேர்ந்தெடுக்கவில்லை. ஜீவாவையே தேர்ந்தெடுத்தனர்.

சட்டசபைத் தேர்தலில் கலந்துகொள்வது என்று காங்கிரஸ் முடிவுகட்டிவிட்டது. மந்திரிசபைகளை ஒப்புக்கொள்வதை ஜீவா ஏற்றுக்கொள்ளாதபோதிலும், காங்கிரஸின் தேர்தல் திட்டத்தை ஜனங்களுக்கு விளக்கிப் பிரசாரம் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டார்.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் ஜீவாவின் கர்ஜனை எதிரொலி செய்தது. தொழிலாளருக்கும், விவசாயிகளுக்கும் காங்கிரஸ் பிரகடனப்படுத்திய உரிமை சாஸனத்தில் கண்ட ஒவ்வொரு அம்சத்தைப் பற்றியும் மணிக்கணக்கில் ஒவ்வொரு கூட்டத்திலும் பேசினர்.

XIII

தலைவர் ஜீவா.

காங்கிரஸ் தலைவர் என்றே, சோஷியலிஸ்டு தலைவர் என்றே ஜீவாவை எல்லோரும் சொல்வதில்லை. அந்தப் பதவிகளுக்குப் பாத்தியதை கொண்டாடப்பலர் உண்டு. ஜீவாவை "தொழிலாளர்

தலைவர்'' என்றே எல்லோரும் சொல்வார்கள். ஏனெனில், தொழிலாளி வர்க்கத்திற்கு ஆதியி லிருந்து பாடுபட்டவர் ஜீவா. உழைப்பின் பெரு மையை உணர்ந்தவர்; பசியின் கொடுமையைப் பார்த்தவர்; தொழிலாளர்களும் அவரைத் தங்களில் ஒருவராகவே கருதுகிறார்கள்.

வர்க்க உணர்ச்சியை மறந்து, முதலாளிகளைக் கண்டு நடுங்கி, எப்படிப் போராடுவது என்று புரியா மல் விழித்துக்கொண்டிருந்த தமிழ்நாட்டுத் தொழி லாளி வர்க்கத்திற்கு உணர்ச்சியூட்டி ஸ்தாபனம் அமைத்துக்கொடுத்து, போராடும் வழியைச் சொல் லிக்கொடுத்த தலைவர்களில் ஒருவர் ஜீவா.

ஜீவா என்றால் முதலாளிகளுக்குச் சிம்மசொப் பனம்; அதிகாரவர்க்கத்திற்கு பூதம்; தொழிலா ளரை ஏமாற்றும் சுயநல கங்காணிகளுக்கு வயிற் றுக் கடுப்பு! எத்தனை சங்கங்களை அவர் ஸ்தாபித் திருக்கிறார்! எத்தனை போராட்டங்களை நடத்தி யிருக்கிறார்! எத்தனை தில்லு முல்லு திருகுதாளங் களை அம்பலப்படுத்தியிருக்கிறார்!

சொல்லுவது ஒன்று, செய்வது வேறொன்று என்பது அவருடைய அகராதியிலேயே கிடையாது. வேலை நிறுத்தம் செய்யச்சொல்லிவிட்டு, ஓடிப்போய் பதுங்கிக்கொள்வதோ, முதலாளிகளுக்குத் தொழி லாளர்களைக்காட்டிக் கொடுப்பதோ அவர் சரித் திரத்திலேயே இல்லை. தொழிலாளிவர்க்கம் செயலில் இறங்கிவிட்டால், கடைசி வரை அதன் கூடவே இருப்பார்; உணர்ச்சிகுன்றியவர்களுக்கு உணர்ச்சி யூட்டுவார். போலீஸ் அடக்குமுறையைக் கண்டு பயப்படுகிறவர்களுக்கு தைரியத்தை ஊட்டுவார்;

ரௌடிகளின் அட்டகாசத்தை எதிர்த்துப் போர் தொடுப்பார். கருங்காலிகளை நடுங்கவைப்பார். தடியடிகளைத் தாங்கவேண்டுமா? சிறைக்குச்செல்ல வேண்டுமா? எதற்கும் தயங்கமாட்டார்.

வர்க்க உணர்ச்சி இழந்து, மற்றவர்களின் தூண்டுதலால் தொழிலாளர்களில் சிலர் அவரை வெறுப்பார்கள். கூட்டத்தில் கூச்சல் போடுவார்கள்; கல்லெறிந்து கலாட்டா செய்வார்கள். ஆனால் அவர் அவர்களை விரோதிகளெனக் கருதமாட்டார். புத்தி தடுமாற்றங்கொண்ட சகோதர தொழிலாளர்களாகவே பாவிப்பார். அவர்களுடைய புத்தியைச் சரிசெய்யப் பொறுமையுடன் முயற்சியெடுத்துக் கொள்வார். இதனாலேயே, அன்று முதலாளியின் கங்காணியான வரதராஜுலுநாயுடுவின் தூண்டுதலால் மதுரையில் ஜீவாவை எதிர்க்கத் துணிந்த கோஷ்டிகள் இன்று அவரை வரவேற்க மாலைகளுடன் நிற்கும் கம்யூனிஸ்டுகளாக இருக்கிறார்கள். தொழிலாளி வர்க்கத்தின் மனதை அறிந்தவர் ஜீவா!

"சங்கம்" என்று வெறும் பெயரைக் கூறிக் கொண்டு கோவைத் தொழிலாளர்களின் உணர்ச்சியைக் குன்றச் செய்துவந்தார் பாசுதேவ். 1937-ல் "மில் தொழிலாளர் சங்க"த்தை தோழர் ஜீவா ஸ்தாபித்தார். தொழிலாளர்களுக்கு பலம்பொருந்திய ஸ்தாபனத்தின் அவசியத்தை உணர்த்தினார்.

1937-ல் மாபெரும் வேலை நிறுத்தம் நடந்தது. முப்பது ஆயிரம் தொழிலாளர்களுக்குமேல் வேலைக்குச் செல்லவில்லை. மிகப்பெரிய போராட்டம். ஜீவாவின் தலைமையில் தொழிலாளர் ஜெயித்தார்கள்!

தென் இந்திய ரயில்வே தொழிலாளர் சங்கம், இன்று இந்திய ரயில்வே தொழிலாளர் அவ்வளவு பேருக்கும் உணர்ச்சியூட்டும் ஆதர்சமாக மிளிர்கிறது. முப்பதாயிரம்பேருக்குமேல் அங்கத்தினர்கள்! ரயில்வே போர்டு கண்டு நடுங்கும் மாபெரும் சக்தி! அன்று செத்துப்போய்க் கிடந்தது. 1928-ம் வருடத்திய வேலை நிறுத்தத்திற்குப் பிறகு செத்துவிட்டது. அதை உயிர்ப்பித்து ஜீவனளித்தார் ஜீவானந்தம். 1937-ல் திரும்பவும் அச்சங்கத்தை ஸ்தாபித்தார். முஸாபர் அஹமத் தலைமை வகிக்க, ஏ. எஸ். கே. ஐயங்கார் திறந்து வைக்க அதன் முதல் மகாநாடு கூடிற்று.

சென்னையில் கள்ளிறக்கும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். பி. ராமமூர்த்தி, கே. முருகேசன், சி. பி. இளங்கோ, ஜீவா முதலியவர்கள் அதை நடத்தினர். கள்ளுக்கடை முதலாளிகள் ஏவிவிட்ட ரௌடிகளைச் சமாளித்தனர்.

சென்னை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் காரியதரிசியாக தோழர் ஏ. எஸ். கே. அய்யங்கார் இருந்தபோது, ஜீவா அதன் தலைவராக இருந்தார்.

நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைத் தொழிலாளர் சங்கவளர்ச்சியில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டார்.

பெயர்பெற்ற பசுமலை வேலை நிறுத்தத்தை ஜீவாவே நடத்தி வெற்றிபெற்றார். வேலை நிறுத்தம் ஆரம்பித்ததும் ஸ்ரீமான் முத்துராமலிங்கதேவர் தோழர். வி. ராமனுதன் முதலிய சங்கத்தின் தலைவர்கள் முதற்கொண்டு சுமார் 100 சங்கத்தின் அங்கத்தினர்களும் ஊழியர்களும் சிறைக்கு அனுப்பப்பட்

டனர். சென்னையிலிருந்து தோழர் ஜீவா ஓடோடியும் சென்ருர். மதுரை நகரம் மட்டுமல்ல; தமிழ் நாடே பிரமிக்கத் தக்க விதத்தில் வேலை நிறுத்தத்தை நடத்தினுர். காங்கிரஸ் மந்திரி சபையும், ஸ்தல காங்கிரஸ் தலைவர்களும்., எஸ். ஆர். வரதராஜுலு நாயுடு போன்ற தொழிலாளி வர்க்கத்தின் துரோகியும், பணத் திமிர்கொண்ட முதலாளியும் கைவரிசை முழுவதும் காட்டிக் கடுமையாக எதிர்த்தும் வேலை நிறுத்தத்தில் வெற்றிபெற்ருர் ஜீவா. சாதாரண வெற்றியல்ல; நூற்றுக்கு நூறுபங்கு வெற்றி!

இந்த வேலை நிறுத்தத்தின்போது ஜீவா சிறையிலும் தள்ளப்பட்டார். அவர் மீது நடந்த வழக்கு மதுரைத் தொழிலாளி வர்க்கத்திற்குப் புத்துயிரளித்தது என்னலாம்.

சென்னை பிரஸ் தொழிலாளர் போராட்டம் மிகப் பெரிது. தோழர்கள் எஸ். வி. காட்டே, ஏ. எஸ். கே. ஐயங்கார், ஜீவா, ஸ்ரீனிவாச ராவ் முதலிய எலலாத்தோழர்களும் அதில் பங்கெடுத்துக் கொண்டார்கள். சூட்பாஸ்டர் பிரஸ், டயோசிசன் பிரஸ், ஹோ அண் கோ, எம். பி. எச், தினமணி பிரஸ் முதலிய பல பிரஸ்களில் வேலை நிறுத்தம் நடந்தது. ஒரு பிரஸ் விட்டால் இன்னொரு பிரஸில் ஸ்ட்ரைக்! சூட்பாஸ்டர் பிரஸ் வேலைநிறுத்தத்தில் 6 பேர் சிறைக்கனுப்பப்பட்டனர். ஹோ அண் கோஸ்ட்ரைக்கில் 37 பேர்! டயோசிசன் பிரஸ் ஸ்ட்ரைக்கில 45 பேர் ஜெயிலுக்குப் போனுர்கள்! எம். பி. எச். ஸ்டரைக்கில் 52 பேர். 'தினமணி' ஸ்ட்ரைக்கில் 84 பேர்! இந்த வேலை நிறுத்தங்கள்

சென்னையையே கலக்கிவிட்டன. எங்குபார்த்தாலும் தொழிலாளர்களின் ஊர்வலங்கள்! ஆர்ப்பாட்டங்கள்! பொதுக் கூட்டங்கள்! "புரட்சி ஓங்குக! உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்" என்ற கோஷங்கள்!

1939-ல் ஒரு விசேஷமான நிகழ்ச்சி நடந்தது. இவ்விதம் தொழிலாளர் போராட்டங்களை நடத்திய காரணத்திற்காக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது!

பீஹாரில் விவசாயிகள் ரொம்ப அவதிப்பட்டனர். அவர்களைக் கிஸான் சபைகளில் கம்யூனிஸ்டுகளும், காங்கிரஸ் ஊழியர்களும் ஒன்று திரட்டினார்கள். பெரிய ஜமீன்தார்களையும், நிலச்சுவான்தார்களையும் எதிர்த்துப் போராடினார்கள்.

இந்த ஜமீன்தார்களும் நிலச்சுவான்தார்களும் காங்கிரஸ்காரர்கள். காங்கிரஸ் தலைவர்களாகவும் பலர் இருக்கின்றனர். கிஸான் கிளர்ச்சியை அடக்க வழிதேடினர். பாபு ராஜேந்திர பிரஸாத் மூலம் காங்கிரஸ் காரியக்கமிட்டியின் உதவியை நாடினர். கிஸான்களின் கோரிக்கைகளை அந்த நிலச்சுவான்தார்கள் அங்கீகரிக்கவேண்டும் என்றனர் ஊழியர்கள்.

காங்கிரஸ் காரியக்கமிட்டி நிலச்சுவான் காங்கிரஸ்காரர்களுடன் சேர்ந்துகொண்டது! அ. இ. கா. வர்க்கப் போராட்டத்தைத் தூண்டக்கூடிய கிஸான், தொழிலாளர் கிளர்ச்சிகளில், காங்கிரஸ் காரர்கள் பங்கெடுத்துக்கொள்ளக்கூடாது என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிற்று. இந்தத் தீர்மானத்திற்கிணங்க அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது.

XIV

யுத்தம்

1939-ல் யுத்தம் ஆரம்பித்தது. தொழிலாளர் தலைவர்களை அதிகாரவர்க்கம் வேட்டையாடிற்று. யுத்தத்தை எதிர்த்துப் பேசியதற்காக அக்டோபர் 28-ம் தேதி ஜீவா கைது செய்யப்பட்டார். $2\frac{1}{2}$ மாதங்களைச் சிறையில் கழித்துவிட்டு வெளியே வந்தார்.

தமிழ் நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்தார். மங்களூருக்கு அதிகாரவர்க்கத்தால் விரட்டப்பட்ட எஸ். வி. காட்டேயை அங்கு சந்தித்தார். அதிகாரவர்க்கம் மோப்பம் பிடித்தது.

1940 ஜனவரி 11ம் தேதியன்று, சென்னைமாகாணத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று அதிகாரவர்க்கம் உத்தரவு போட்டது. 16ம் தேதி இரவு சென்னையை விட்டுப் புறப்பட்டு காரைக்காலுக்குச் சென்றார். அந்த அதிகாரவர்க்கத்திற்குக் கிலி பிடித்துவிட்டது. அங்கிருந்தும் ஓடவேண்டுமென்று விரட்டிற்று. பிரஞ்சிந்தியாவினுள் நுழையக்கூடாதென்று உத்தரவு பிறந்தது. அங்கிருந்து புறப்பட்டு பம்பாய்க்குச் சென்றார்.

ஆறுமாதங்கூட அங்கு வசிக்கவில்லை. திரும்பவும் போலீஸ் வந்துவிட்டது! வீட்டைச் சோதனை போட்டது; ஆக்ஷேபகரமானது ஒன்றும் கிடைக்கவில்லை. எனினும, கைது செய்தது! பம்பாய் பைகுல்லா ஜெயிலில் பத்துநாட்கள் வைத்திருந்துவிட்டு, வேலூர் சிறைக்குக் கொண்டுவந்தது.

1940 மார்ச் மாதத்தில் தேசமெங்கும் கம்யூனிஸ்டுகள் கைதுசெய்யப்பட்டனர். தன்னுடைய

நெருங்கிய தோழர்களில் அநேகமாக எல்லோரை யும் வேலூர் ஜெயிலில் ஜீவா சந்தித்தார்!

1942-ல் விடுதலையானார். சிறைக்கதவு வரையி லும்தான்! கதவைத் தாண்டியவுடன் திரும்பவும் போலீஸ் பந்தோபஸ்துடன் ரயிலில் ஏற்றப்பட்டுத் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு அழைத்துச் செல் லப்பட்டார்.

பத்து நாட்கள்வரை ஏதோ கொஞ்சம் சுதந் திரம் கிடைத்தது திருவிதாங்கூரில். பதினோராம் நாள் இன்னொரு உத்தரவு. பூதப்பாண்டியை விட்டு வெளியேறக் கூடாது என்ற உத்தரவு! தேசத்திற் காக வீட்டைவிட்டுக் கிளம்பிய ஜீவாவை, இவ்விதம் அதே வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்து, வெளியே கிளம்பாத வாறும் தடுத்தது அதிகாரவர்க்கம். இதோடு வாய்ப்பூட்டுச் சட்டம் வேறு.

காந்திஜெயந்தி வந்தது. எந்த காந்திஜியின் போதத்தால் உணர்ச்சிபெற்று ஊரைவிட்டுப் போனாரோ, அந்தகாந்திஜியை ஜீவா இப்பொழுது ரொம்ப நன்றாக உணர்ந்துகொண்டிருந்தார். இப் போது சிறுவனின் உள்ளமில்லை; அனுபவம் முதிர்ந்த தலைவரின் உள்ளம்; அந்த ஜெயந்தியில் கலந்துகொண்டு, தான் அறிந்த காந்திஜியைப் பற்றிப் பிரசங்கம் செய்தார். இதனால் அவர்மீது வழக்குத் தொடரப்பட்டது. ஒருவருட கடினகாவல் தண்டனையையும், 500 ரூபாய் அபராதத்தையும் பெற்றார். மேல்கோர்ட்டில் மனுச் செய்துகொண் டார். பேசியதில் ஆக்ஷேபகரமானது ஒன்றுமில்லை என்று இத்தண்டனையை அந்தக்கோர்ட்டு ரத்து செய்துவிட்டது. திருவிதாங்கூரில் லாக்அப்களி

லும் திருவனந்தபுரம் ஜெயிலிலும் 6 மாதம் கழித்தார்.

கடைசியாக 1944-ல், கிராமத்தை விட்டு வெளியே போகக்கூடாது என்ற உத்தரவு ரத்தானது. ஆனால் சென்னை மாகாணத்திற்குள் நுழையக்கூடாது என்ற சென்னை சர்க்காரின் உத்தரவு ரத்தாகவில்லை.

இப்பொழுது திருவாங்கூர்மக்களுக்குச் சேவை செய்ய அவருககுச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ரொம்ப குறைந்த காலத்தில் நாஞ்சிநாட்டில் பல வாலிபர் சஙகங்களையும், தொழிற் சங்கங்களையும், கிஸான் சபைகளையும் அமைத்தார். ஊர் ஊராய்ச் சென்று பிரசங்கங்கள் புரிந்து சமஸ்தான மக்களைத் தட்டி எழுப்பினார்.

தமிழ் நாட்டிற்கு வரக்கூடாது என்ற உத்தரவை ரத்துச்செய்யவேண்டும் என்று தமிழ் நாட்டில் கிளர்ச்சி நடந்தது. தொழிற் சங்கங்களும், கிஸான் சபைகளும் தீர்மானங்களை நிறைவேற்றிச் சர்க்காருக்கு அனுப்பியவண்ணமிருந்தன. இதன் பயனால் கடைசியாக 1945 அக்டோபர் மாதம் 5ம் தேதியன்று இத் தடையுத்தரவு ரத்தானது.

தமிழ்நாட்டுத் தொழிலாளரிடையே ஜீவா திரும்ப வந்தார். சென்னையில் அதுவரை தூங்கிக்கொண்டிருந்த தொழிலாளர்கள் அவரை வரவேற்க ஓடி வந்தார்கள். பெரியகூட்டம் நடந்தது. மதுரை, திருச்சி, கோவை முதலிய ஒவ்வொரு ஊரிலும் ஆயிரக் கணக்கில் பத்தாயிரக்கணக்கில் தொழிலாளர்களும் பொதுமக்களும் அவரை வரவேற்றனர். மாலைகளைச் சுமக்கமுடியாமல் அவர் கழுத்துத் திண்

டாடிற்று! நியாய உணர்ச்சியை இழந்துவரும் நம் 'தேசீய' பத்திரிகைகள் அந்தச் செய்திகளையெல்லாம் மறைத்துவிட்டன!

தமிழ் நாட்டில் ஜீவா செல்லுமிடங்களிலெல்லாம் ஜீவாவின் ஜீவன் நிறைந்த புதிய தமிழ் நாட்டைப் பற்றிக் கேட்க வாலிபர்களும் மாணவர்களும் பலாப்பழத்தை ஈக்கள் மொய்ப்பது மாதிரி மொய்த்து விடுகிறார்கள். கிராமாந்தரங்களிலிருந்து விவசாயிகள் நூற்றுக் கணக்கில் கட்டுச்சாத மூட்டைகளுடன் 10 மைல் 15 மைல் கால்நடையாக நடந்து வந்து ஜீவாவின் பிரசங்கத்தைக் கேட்பதும், நகரங்களில் ஆலைகளிலிருந்து ஆயிரக் கணக்கான தொழிலாளிகள் ஊர்வலமாக வந்து ஜீவாவின் பேச்சில் சொக்கி உணர்ச்சிபெற்றுச் செல்வதும் காணவேண்டிய காட்சிகள்.

XV
கவிஞர் ஜீவா

பள்ளிக்கூடத்தில் ஏழாம் வகுப்பில் படிக்கும்போதே ஜீவா கவிகளைப் புனைய ஆரம்பித்துவிட்டார் என்று முன்பே கூறினேன். ஆம் ஜீவா பிரசங்கி மட்டுமல்ல; தலைவர் மட்டுமல்ல; உயர்ந்த தமிழ் எழுத்தாளர் மட்டுமல்ல; அவர் ஒரு கவிஞருமாவார்.

கவிஞர் என்றால் காடுகளையும் மலைகளையும் பற்றிப் பாடுகிறவர் அல்ல. கடல்களில் அடிக்கும் அலைகளைக்கண்டு களிப்பவர் அல்ல. செல்வச் சீமான்களை இந்திரன் என்றும், சந்திரன் என்றும் வர்ணிப்பவரல்ல.

சுருக்கமாகக்கூறின், காசுக்கோர்பாட்டுப் பாடும் சீட்டுக்கவி அல்ல.

அவர் புரட்சிக்கவி. காடுகளைத் திருத்தி நகரங்களை நிர்மாணிக்கும் மனிதனைப் பற்றிப் பாடுவார். மலைகளைக் குடைந்து ரயில் பாதைகளைப் போடும் தொழிலாளியைப்பற்றிப் பாடுவார். அலைகளை அடக்கிக் கப்பல்களை ஓட்டும் மாலுமிகளைப்பற்றிப் பாடுவார். செல்வச் சீமான்களின் காலடியில் கிடந்து அல்லலுறும் மனிதப் பிராணிகளைப்பற்றிப் பாடுவார்.

அவருடைய பாட்டு ஒரு மின்சாரசக்தி. உழைப்பாளிகளுக்கு உணர்ச்சியூட்டுகிறது. அவர்கள் உள்ளத்தில் சுதந்திர ஜ்வாலையைத் தூண்டிவிட்டுப் பிரகாசிக்கச் செய்கிறது.

மின்னல் பொறிகளாக மாறுகிறது. சோம்பேறிக் கூட்டத்தைத் தாக்குகிறது. உழைப்பாளிகளின் உழைப்பைச் சுரண்டி உல்லாசமாக உலக போகங்களை அனுபவித்து வாழும் பிரமுகர்களின் ஹிருதயத்தை உக்கிரமாகத் தாக்கி உடைக்கிறது.

உழைப்பாளிகளின் உள்ளத்தில் அது தூண்டி விடும் ஜ்வாலை வர்ணஜாலங்களைக் காட்டுகிறது. அதன் அடித்தளத்தைப் பார்த்தால் பச்சை நிறம் பளிச்சென்று தெரியும். மேல்தளத்தில் சிகப்பு ஒளி கண்ணைப் பறித்துச் செல்லும். அடித்தளம் நேசம்; மேல்தளம் வெறுப்பு! நேசத்திலிருந்து எழுந்த வெறுப்பு!

"நேசி! அன்பு செலுத்து! விரும்பு! ஜனங்களை நேசி; தேசத்தை நேசி; அதன் உன்னத நாகரீகத்தை நேசி; உயர்ந்த கலைகளை நேசி; அறிவு வளர்ச்சியை விரும்பு! சுதந்திரத்தை விரும்பு

ஒற்றுமையை விரும்பு" என்று கூறுகிறது. "வெறு! ஒதுக்கித்தள்! வெட்டிச்சாய்! மக்களை மிருகங்களாக நடத்தும் கூட்டத்தை வெறு! உழைப்பைக் கொள்ளைகொண்டு வறுமையில் ஆழ்த்தும் வர்க்கத்தை வெறு! மடமையைப் பரப்பும் கயவர்களை வெறு! உன்னத நாகரீகத்தை நாசமாக்கும் நயவஞ்சகர்களை வெறு! கலைகளை சுயநலத்திற்குப் பயன்படுத்தும் காதகர்களை வெறு!" என்று வெறுப்புக் கணைகளை மக்களின் விரோதிகள் மீது வீசுகிறது.

அவர்பாடுகிறார் ;—தொழிலாளி கதறுகிறான் :

" நானோர் தொழிலாளி—ஒரு
நாய்க்குறும் சுகமேனும் வாய்க்கும் வழியில்லை (நா)

ஏனோ புவி வாழ்வு—ஈயும்
எறும்பும் சுதந்திரம் விரும்பி யடைய நான்

தானே அடிமை நொந்து—கொடும்
சஞ்சலத் தீதள்கொட்டித் அஞ்சு கிறேனந்தோ! (நா)

வறுமை கடிக்குதையோ—பசி
வாட்டி வதைக்குதே வருந்திச் சிதைக்குதே

பொறுமை யுப தேசம்—பசி
பொறுத்திடச் செய்யாது பெருத்த மதிமோசம் (நா)

கொள்ளைக் கிறை யானேன்—பழங்
கொள்கையை நம்பிநான் குடிகவிழ்ந்துபோனேன்

பிள்ளை மதி யுடனே—மதப்
பித்தம் தலைக்கேறி மெத்த உடைந்திட்டேன் (நா)

உழைத்து உடல் தேய்ந்தேன்—பலன்
உண்ட மூதலாளிகள் நிந்தனை யேமிச்சம்

தழைக்கும் வகையறியேன்..........."

* * * *

இவ்விதம் கதறுகிறன் தொழிலாளி. மேலும் ஜீவா பாடுகிறர் :—

"மாடுகளோ மேய்ந்த இரையை—மென்று
மனதாரத் தின்னுதடா மாநி லத்திலே
ஆடுகள் கடித்த தழையை—இங்கு
அசை போட்டுத் தின்னுவதை யறியாருண்டோ?
கேடுகெட்ட பன்றியுங் கூட—தேடிக்
கிடைத்ததைச் சொந்தமென்று அடைத்து வைக்கும்
பாடுபடும் உனக்கு மட்டும்—பாட்டின்
பலனில்லை..........."

*　　*　　*　　*

நெற்றிநீர் நிலத்தில் விழவும்—நிதம்
நெஞ்சு நோகவும் உடம்பு நெக்குவிடவும்
பற்றிய பசிப்பிணி யோடு—இங்கு
பஞ்சுபடாப் பாடுபட்டு வஞ்ச மின்றியே
சிற்றெறும்பைப் போலுழைத் தாலும்—நீ
தேடியதில் பாத்தியதை செப்பக் கூடாதாம்
மற்றவர்க்கே யாவும் சொந்தமாம்..........."

இவ்விதம் பாட்டாளி மக்கள் இன்னலுற்று இன்னலுற்று வாழ்வதைக் கண்டு குமுறும் ஜீவா வின் உள்ளத்தில் வெறுப்புத்தீ குபீரென்று பற்றி யெரிகிறது.

"கஞ்சியின்றிச் சாவது யாரார்?—பிச்சைக்
காரராகி யிரந்துண்டு மாள்வது யாரார்?
கெஞ்சியே தவிப்பது யாரார்?—சற்றும்
கேள்விமுறை யின்றிமோசம் போவது யாரார்
பஞ்சணையில் தூங்குவது யார்—தினம்
பாலமுதக் கொழுப்புற்று வாழ்வது யார்..........."

என்று கணக்கு எடுக்கும்படி கூறுகிறார். விரல் விட்டு எண்ணிப்பாருங்கள்! எத்தனை பேர்? யார் யார்? எப்படிப்பட்டவர்கள்? பார் உலகத்தை!

"சும்மா யிருப்பவர் தமக்கும்—பல
சூழ்ச்சிகளால் உழைப்போரைச் சுரண்டு வோர்க்கும்
எம்மாதிரி இழி வாயினும்—பலே!
எத்தராகிப் பிறர்பொருள் கத்து வோருக்கும்
சிம்மாதனம் குரு பீடங்கள்—இந்த
செகத்தினைச் சொந்த மாக்கும்சேட்டைப் பாரடா
அம்மா டாவோ! ஈதநீதி காண்............"

இவ்விதம் அநியாயாம் உலகிலே நடக்கிறது. அதைப் போக்குவதற்கு ஒரே வழிதான் உண்டு. அவர் சொல்கிறார்:—

"புல்லைமைசெறி ஆதிக்க வகுப்பா ரெல்லாம்
பொது உடைமைப் புரட்சி யினால் நடுங்கி வீழ்வார்
அலக்கழியத் தொழிலா ளரைப் பிணைக்கும்
அடிமையெனும் சங்கிலிகள் அறுந்து போகும்
பலவிதமாய் நலந்தருமோர் புதிய லோகம்
பாட்டாளி மக்களவர் பாங்காய்ச் சேரும்
உலகத்தில் எத்தேசத்தும் வாழ் கின்ற
உழைப்பாளித் தோழர்களே ஒன்று சேர்வீர்"

பாட்டாளி மக்கள் ஒன்று திரளவேண்டும். போராடவேண்டும். யாரை எதிர்த்து? முதலில்........

"ஏகாதி பத்யம் வந்து புகுந்து
ஏறி மிதித்திட நொந்தோம்............"

ஆதலின்,

…………ஏகாதிபத்யம் இருந்திடும் போதினிலே
    ஜோகாத சமுதாயம் பெறமுடியாததாலே…………"
…………ஆங்காரமுடன் போர் செய்வோம்

ஓங்குக புரட்சி ; ஏகாதிபத்யம் ஒழிக; நம்கொடி வாழ்க"

ஏகாதிபத்யத்தை வீழ்த்திய பிறகு நீங்கள் என்ன செய்யவேண்டும்?

"ஒற்றுமை ஊக்கத்தாலே உன்னத நோக்கத்தாலே
    உடைந்து தகர்ந்து சிதைந்த வாழ்வை
மூடைந்து வலிமை யடைந்து நீங்கள்
    பெறவேணும் புதுவாழ்வு
அற்புதம் கலகலக்கும் ஆனந்தம் தழைதழைக்கும்
    அருமையான புதிய லோகம்
பெருமையாக உதிக்க நீங்கள்பெறவேணும்………."

அந்தப் புதிய லோகம் எவ்விதம் இருக்கும்? அற்புதம் கலகலக்கும் என்றால் என்ன அர்த்தம்? ஏன் ஆனந்தம் தழைதழைக்கும்?

அப்புதிய லோகத்தில்,

"…………………………
    பெரும் தொழில்செய் எப்பொருளும் பொதுவில்மாறும்
பிறர்கொழுக்கத் தொழிலாளர் வாட மாட்டார்
    ஒருவனையேய்த் தொருவனுண்ணும் கொள்கை சாகும்

உறுதொழிலில் உற்பத்தியில் குழப்பம் இல்லை
இருநிலத்தில் எண்டிசையும் வளமை துள்ளும்
".............................
வருத்தி அரித் திடுகின்ற வறுமை யில்லை
பெருவாரியின் நடுவில் காணும் இன்மைப்
பேச்சில்லை ; தனிஉடமைப் பித்த மில்லை
பொருளா தாரத்தில் சமஉரிமை யோங்கும்
புதுமை விஞ்ஞானச் செழுமை கமகமக்கும்
இருபாலார் சரிநிகராய் வாழ்வர் திண்ணம்
வர்த்தகத்தில் போட்டியில்லை யுத்த மில்லை
அரசியலில் தொழில் காயகம்தான் மேவும்
அடிமையுடன் மடமைமதம் அற்று வீழும்
மருளகலும் ; தேசவெறி நிறபேதம் போம் ;
மனிதசமாஜம் மலரும் ; புனித வாழ்வாம் ;
இருளகல ஞானவொளி எங்கும் வீசும்.
எழுதோழா ! எழுதோழா ! எழுவாயின்றே !"

இப்புதிய லோகத்தை நிர்மாணிக்க, தோழர்களே! இன்றே எழுங்கள்! பொது மக்களைத் தட்டி எழுப்பு! உணர்ச்சியூட்டு! உற்சாகமூட்டு! ஜனசக்தியைக் கண் சக்தியாக்கு!

"சென்றகாலச் சட்ட திட்டங்கள்—இங்கு
செத்ததென்று கொட்டு ஜெயபேரிகை கொட்டு!
நன்றிகெட்ட மானிடப் பேய்கள்—இங்கு
நடுங்கிமடி யச்செய்யும் கடும்புயல் பார்!
ஒன்றுபட்ட செஞ்சேனை வெள்ளம்—கடல்
ஒலியினும் பேரொலியாய் ஒலிக்குது கேள்!
இன்றுபுதி தாகப் பிறந்தோம்—என்று
எழுந்துபுது உலகில் ஏறு போல்நட"

என்று வாலிபர்களுக்குக் கூறுகிறார்.

ஜனங்களை ஒன்றுதிரட்டிப் போராட்டத்திற்குத் தயார்படுத்துவது சாமான்ய காரியமல்ல. இம்முயற்சியில் ஈடுபடுகிறவர்களுக்கு ஒவ்வொரு திசையிலிருந்தும் எதிர்ப்பு வரும். நாம் எதிர் பார்க்காத இடங்களிலிருந்தெல்லாம் எதிர்ப்பு வரும். இவற்றைக் கண்டு அஞ்சினல், இயக்கம் அதோகதிதான்!

ஆகவே,

"அச்சம் அவநம்பிக்கை—பழிப்
பார்த்த சுயநன்மை யெல்லாம்
துச்சமாய்த் தள்வோமடா—வீரம்
சூழ்துணிவு கொள்வோமடா!

உற்ருர் உறவினர்கள்—சொந்த
ஊர்ஜனங்கள் நேசர்களும்
கற்ருரும் தூற்றிஞலும்—கொள்கை
கைவிடுவதென்ஞேமடா!

ஆருயிரே! பெற்றெடுத்த—தந்தை
அன்னைமனம் கோணிஞலும்
சீரிய தோழர்களும்—ஓர்கால்
சீறினும் மனந்தளரோம்!

தூங்கிடோம் பசிபொறுப்போம்—சிறைத்
துன்பமெதையும் சகிப்போம்
ஏங்கா துழைப்போமடா—பூவில்
இன்பசம தர்மத்திற்கே!

தூக்குமேடை யேறத்தயார்—சுடும்
துப்பாக்கிமுன் நிற்கத்தயார்
நோக்கம் நிறைவேறுவதற்கே—எத்த
நோன்பு கொண்டிடவும் தயார்".

இவ்விதம் பாடுகிறார் ஜீவா.பாடுவதோடு நிற்க வில்லை. அதில் அவர் கூறும் ஒவ்வொரு கருத்தை யும் வாழ்க்கையில் அனுஷ்டித்து வருகிறார். புரட் சிக் கவியும் அவர்; புரட்சிக்காரரும் அவரே!

அவர் எண்ணற்ற பாட்டுகளைப் பாடியிருக் கிறார். முக்கியமான சில பாட்டுகளிலிருந்து, சில பகுதிகளை மட்டும் பொறுக்கியெடுத்து மேலே தொகுத்துக் கொடுத்திருக்கிறேன்.

இந்திய மக்களின் சுதந்திர இயக்கத்தின் போக்கையே அவர் பாட்டுகளாகப் பாடியிருக்கிறார் ஆகவே, இந்தியா வாழும்வரை அவருடைய பாட்டு களும் வாழும். என்றும் அழியாது! தமிழ் இலக்கி யத்தில் உயரிய ஸ்தானத்தை அவருடைய பாட்டு களுக்குச் சுதந்திர தமிழ்நாடு அளிக்கும் என்பதில் சந்தேக மில்லை.

ஜீவாவின் இந்தப் பாட்டுகள் வெறும் கவிதை யல்ல. பொழுது போக்குக்காகப் படித்து ஆனந் தப் படத்தக்கவை அல்ல. பொதுக் கூட்டங்களிலே பாடி ஜனங்களுக்கு உணர்ச்சியூட்டுவதற்காக எழு தப்பட்டவை. ஆதலின், யாரும்—கற்றவரும் கல்லா தவரும்—சுலபமாகப் பாடக்கூடிய வகையில் இவற்றை அமைத்திருக்கிறார். அப்போதுக்கப் போது புதிதாக வெளிவரும் சினிமா படங்களில், புதிய புதிய மெட்டுகளில் பாட்டுகள் பாடப்படுகின் றன. சகல ஜனங்களும் இப்பாட்டுகளை சுலபமாகப்

பாடுகிறார்கள். ஆகவே, ஜீவாவும் இந்த மெட்டுகளையும் எடுத்துக் கையாண்டிருக்கிறார். ஜனங்களெல்லோரும் வாய்விட்டு இவற்றைப் பாடுவதுதான் லக்ஷியம்.

காலப் போக்கில் இன்னும் அதிகமாக, சுதந்திர இயக்கத்தை ஒட்டி அவர் புதிய பாடல்களை இயற்றுவார் என்பதில் சந்தேகமில்லை.

XVI

அபேட்சகர் ஜீவா

தொழிலாளி வர்க்கத்திற்கும், தேச சுதந்திரத்திற்கும் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்திருக்கும் தோழர் ஜீவானந்தத்தை, வருகிற சட்டசபைத் தேர்தலில் தன்னுடைய அபேட்சகராக கம்யூனிஸ்டு கட்சி நிறுத்தி வைத்திருக்கிறது. சென்னை பேக்டரி தொழிலாளர் தொகுதியில் அவர் போட்டியிடுவார்.

இந்தக் காலம் பெரிய சோதனை காலம். தேசத்திற்கு மிகவும் கஷ்டமான காலம். யுத்தம் நின்றதனால், இதுவரை நம்மை பாதித்துவந்த பிரச்சினைகள் கோர ஸ்வரூபத்தை எடுத்திருக்கின்றன.

பொருளாதார வாழ்வு சீரழிந்து வருகிறது. லக்ஷக்கணக்கானபேர் வேலையில்லாமல் திண்டாடப்போகிறார்கள். தொழிலாளர்களின் சம்ப

ளத்தை வெட்டுவதற்கு முதலாளிகள் பிரயத்தனம் செய்கிறார்கள். கிராமங்களில் விவசாயம் சீரழிகிறது. நிலச்சுவான்தார்களும், வியாபாரிகளும், முதலாளிகளும், லேவாதேவிக்காரர்களும் கள்ள மார்க்கெட்காரர்களாகிவிட்டனர். உணவு தான்யத்தைப் பதுக்கிவைத்துவிடுகின்றனர். லக்ஷக் கணக்கான ஜனங்களுக்கு உண்ண உணவு கிட்டாது.

ஏற்கனவேயே தமிழ்நாட்டில் பஞ்சம் தலை தூக்க ஆரம்பித்துவிட்டது. உணவு ரேஷனும் குறைக்கப்பட்டுவிட்டது.

இந்த கஷ்டக்காலத்தில் தேசம் பிழைக்க வேண்டுமானால், தேர்ந்தெடுக்கப்படும் மந்திரி சபைகள் உடனடியாகக் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு, அனுஷ்டானத்தில் நிறைவேற்ற வேண்டும் என்று கம்யூனிஸ்டுக் கட்சி கூறுகிறது:

(1) ஆள் குறைத்தல் கூடாது; எல்லோருக்கும் வேலை கொடுக்கவேண்டும்.

(2) சம்பளத்தைக் குறைக்கக்கூடாது. மனிதர்களாய் வாழ்வதற்குத் தேவையான சம்பளத்தைக் கொடுக்கவேண்டும்.

(3) ஒரு நாளைக்கு 8 மணி நேரம்தான் வேலை; வாரம் முழுவதற்கும் 44 மணி நேரம் வேலை.

(4) தொழிற் சங்கங்களை உடனடியாக அங்கீகரிக்கவேண்டும்.

(5) வேலை நிறுத்தம் செய்வதற்குள்ள உரிமையை அங்கீகரிக்கவேண்டும்.

(6) சம்பளத்துடன் ஒருமாத லீவுவேண்டும்.

(7) வயோதிகக் காலத்திற்குச் சகாயநிதி வேண்டும்.

(8) பெண் தொழிலாளர்களுக்குப் பிரசவ சகாயம் வேண்டும்.

(9) எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி வேண்டும்.

(10) வாலிபர்கள் எல்லோருக்கும் நல்ல தொழிற்பள்ளிக்கூடங்கள் வேண்டும்.

(11) எல்லாக் குடும்பங்களுக்கும் சௌகரியமான, மலிவான வீடுகள் வேண்டும்.

(12) நோயாளிகள் எல்லோருக்கும் இலவச ஆஸ்பத்திரிகள் வேண்டும்.

மேற் கண்டவற்றை உடனடியாக மந்திரி சபைகள் நிறைவேற்றவேண்டும். கள்ளமார்க்கெட்காரர்களும் கொள்ளை லாபக் காரர்களும் இவற்றை நிச்சயம் எதிர்பார்கள். அந்த எதிர்ப்பை உடைத்தெறிந்துவிட்டு, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கம்யூனிஸ்டு எம்.எல்.ஏ.க்கள் சட்டசபைகளில்

கிளர்ச்சிசெய்வார்கள். மனச்சாக்ஷியை விற்காத மற்ற எம். எல். ஏ. க்களுக்கு உதவுவார்கள்.

செங்கொடியின் கட்சியாகிய கம்யூனிஸ்டுக் கட்சி கீழ்க்கண்ட காரியங்களுக்காகத் தேசமக்க ளெல்லோரையும் தட்டி எழுப்பும் :—

(1) நம் கிராமங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் கொள்ளை லாபக்காரர்களையும், கள்ளச் சேமிப்பாளர்களையும் அகற்றுவது.

(2) ஜனங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நம் தேசத்தின் பொருளாதாரத்தை நிர்மாணிப்பது.

(3) சுதந்திர சுபீட்ச இந்தியாவில், செல்வம் செழித்து சுபீட்சத்துடன் திகழும் நகரங்களாக நம்முடைய நகரங்களை மாற்றியமைக்கப் போராடுவது.

இந்தப் போராட்டத்தில் மத்தியதர வர்க்கத்தின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும், தொழிலாளி வர்க்கத்துடன் அதன் ஒற்றுமையைக் கட்டுவதற்கும் கம்யூனிஸ்டுக் கட்சி பெரும் முயற்சி எடுத்துக் கொள்ளும்.

கம்யூனிஸ்டுக் கட்சியின் முழுத் திட்டத்தையும் வேறு பிரசுரங்களில் நீங்கள் படிக்கலாம். அத் திட்டம் தேச பக்தர்கள் எல்லோருக்கும் பொது

வானதிட்டம். சுதந்திர இந்தியாவைச் சீக்கிரத்தில் காண விரும்புகிறவர்களின் சொந்தத்திட்டம். பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தோடு, அதைத்தாங்கி நிற்கும் தூண்களையும் அடித்து வீழ்த்துவதற்கான திட்டம்.

ஏகாதிபத்யம் இந்த நாட்டில் புதிய விதத்தில் தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்தத் திட்டம் போட்டிருக்கிறது.

அந்தத் திட்டத்திற்கு எதிரான இந்திய சுதந்திரத்திட்டம் கம்யூனிஸ்டுத்திட்டம்.

விரைவில் இந்திய சுதந்திரத்தைக்காண விரும்புகிறீர்களா ?

—ஜீவாவிற்கு—

கம்யூனிஸ்டுக்கு ஓட்டுப் போடுங்கள் !

சுதந்திரத்தை நேசிக்கும் இந்தியர்களே தங்களுக்குள் சண்டையிட்டுக்கொள்கிறார்கள். அந்தச்சண்டைக்கு எதிராக, சுதந்திரத்தை நேசிக்கும் இந்தியர்கள் எல்லோரும் ஒன்று பட்டு நிற்பதற்கு வழி செய்கிறது கம்யூனிஸ்டுத்திட்டம்.

இவ்வொற்றுமையை நீங்கள் விரும்புகிறீர்களா?

கம்யூனிஸ்டுக்கு ஓட்டுப் போடுங்கள்.

ஒருவரையொருவர் புறக்கணித்து விட்டுத் தனியாகத் தாங்கள் மட்டும் பிரிட்டிஷாரிடம் சமரஸம் பேசி சுதந்திரத்தை அடைந்து விடலாம் என்று காங்கிரஸ் தலைவர்களும், லீக் தலைவர்களும் நினைக்கிறார்கள். இது வெறும் மாயை. எல்லோருக்கும் ஏகாதிபத்யம் பட்டை நாமம் போடுகிறது.

எல்லோரும் ஒன்று சேர்ந்து நின்று பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை வீழ்த்தி சுதந்திரம் அடைய வேண்டும் என்கிறது கம்யூனிஸ்டுக்கட்சி.

ஏகாதிபத்யத்திற்கு எதிராக எல்லோரும் இதை ஆதரிக்கிறீர்களா? கம்யூனிஸ்டுக்கு ஓட்டுப் போடுங்கள்!

இறுதியாக பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை எதிர்த்துப் போராட காங்கிரஸ் - லீக் - கம்யூனிஸ்டு ஐக்கியப் போர் அணியை ஏற்படுத்தி, இந்தியாவை விடுதலை செய்யவேண்டும்.

கம்யூனிஸ்டு அபேட்சகருக்கு ஓட்டுப்போடுங்கள்!

சுதந்திர இந்தியாவில சுதந்திரக்கிராமங்கள், சுதந்திர நகரங்கள் ஏற்படவேண்டும் என்றால்,

கம்யூனிஸ்டுக்கு ஓட்டுப் போடுங்கள்.

ஜீவாவின் வெற்றி தொழிலாளர் வெற்றி; மத்தியதரவர்க்கத்தின் வெற்றி ——— பொது மக்கள் வெற்றி! முற்போக்கின் வெற்றி!

THE
ROYAL PRINTING WORKS
MOUNT ROAD - MADRAS

P. I. Card Q. H. No. MS. 175 :—5,000 Copies.